Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மயிலிட்டி.

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-17 30-03-2005 புதன்கிழமை ஓசை 40

## புலிகள் மீதான தொடரும் தாக்குதல் குறித்து சூல்ஹெய்மிடம் தமிழ்ச்செல்வன் விசனம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிற தாக்குதல்கள் குறித்து நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேரில் தனது விசனத்தைத் தெரிவித்தார்.

வியன்னாவில் நேற்றுமுன்தினம் எரிக் சூல்ஹெய்மைச் சந்தித்த சு.ப.தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் குறித்து தமது கவலையைத் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் மற்றும் ஆயுதமேந்தாத விடுதலைப் புலிகள் போராளிகள் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல் களையும் அவர் விபரித்தார். இச்சந்திப்பின்போது சுனாமி மீள் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் இருதரப்பினரும் விவாதித்தனர்.

## கண்காணிப்புக் குழு குயிலின்பனிடம் விசாரணை

திருக்கோவில் மண்டான் அகதிமுகாமில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கல்முனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் போராளிகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் நேற்றுச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகரான வில்தியாஸ்துஸ்வானின் மருத்துவமனையில் நேற்று குயிலின்பனைச் (12ஆம் பக்கம் பார்க்க)

# குயிலின்பன் மீதான தாக்குதலைக்கண்டித்து

# திருக்கோவில், ஆலையடிவேம்பில் கர்த்தால்

## அதிரடிப்படையின் தாக்குதலில் இருவர் காயம்

(திருக்கோவில்)

**அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், ஆலையடிவேம்புப் பிரதேசங்களில் நேற்றுக் கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதே வேளை கர்த்தால் கடைப்பிடித்த மக்கள் மீது அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.**

நேற்று முன்தினம் மண்டானா அகதிமுகாமில் வைத்து போராளி ஒருவர் விசேட அதிரடிப் படையின ரால் கைது செய்யப்பட்டுத் தாக்கப் பட்டதைத் தொடர்ந்து இது தொடர் பாகப் பேச்சுக்கள் நடத்தச் சென்ற அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் போராளிகள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக் குதலை மேற்கொண்டமையும். இதில் குயிலின்பன் படுகாயம் அடைந்ததும் தெரிந்ததே. இத்தகைய தாக்குதல் களைக் கண்டித்தே திருக்கோவில் ஆலையடிவேம்புப் பிரதேசத்தை உள்ளடக்கியதாக மக்கள் நேற்றுக் கர்த் தால் அனுஷ்டித்தனர். இக்கர்த் தாலின் போது கடைகள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் என்பன மூடப்பட்டன. அத்தோடு பாடசாலை களும் மூடப்பட்டன.

இத்தகைய நிலையில் கர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக் கள் மீது விசேடஅதிரடிப்படையினர் தாக்குதல் நடாத்தியதில் இருவர் காய மடைந்ததாகத் தெரிவிக்கப்படு கின்றது.





கர்த்தாலின்போது....

## தாக்குதலின் எதிரொலியாக இன்றும் கர்த்தால் ஏற்பாடு!

ஆலையடிவேம்பு, திருக்கோவில் பகுதியில் நேற்று கர்த்தாலில் ஈடுபட்டபொதுமக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இன்றும் கர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அம்பாறை அரசியல்துறைப்பொறுப்பாளர் குயி லின்பன் உட்படப்போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்கு தலைக் கண்டித்து நேற்று நடைபெற்ற கர்த்தாலின் போது அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்தமையைக் கண்டித்தே இக் கர்த்தால் இடம்பெறுகிறது.

## லெப்டினன்ட் இறைமாறனின் வீரவணக்கக்கூட்டமும், வித்துடல் விதைப்பும்

கடந்த 26.03.2005 அன்று புலிபாய்ந் தகல் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றிற்கு உணவு வழங்கிவிட்டு வரும்போது வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் இறைமாறன் (அருள் ராசா- சஞ்சயன் முனிகோவிலடி, கோப் பாய் தெற்கு, கோப்பாய்)எனும் மாவீர ரது வித்துடல் நேற்று விதைக்கப்பட் டது நேற்று மாலை 3.30 மணியள (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நகரம் வழமைக்குத் திரும்பியது

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு நகர்ப் பிரதேசம் நேற்றுக்காலை வழமைக்குத்திரும்பி இருந்தது.நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தொடர்பான தகவல்களை அடுத்துப் பெரும் பரபரப்புக்கும்,இடம்பெயர்வுக்கும் உள்ளா கியிருந்த இந்த நகரம் காலையிலேயே வழமைக்குத்திரும்பி விட்டது.அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் வர்த்தக நிலையங்கள், வைத்தியசாலை, சந்தைகள் என்பன வழமை போல் நேற்று இயங்கிக் கொண்டிருந்தன. அத்துடன் போக்குவரத்து சேவைகளும் வழமைபோல் நடைபெற்றுக் கொண்டிருந்தன. (கு,08)

## வீரச்சாவு

26.03.2005 அன்று இரவு 7.00 மணியளவில் புலிபாய்ந்தகல் பகுதி யில் விடுதலைப்புலிகளின் முகா மொன்றுக்கு உணவு கொடுத்து விட்டுத்திரும்பிய வாகனத்தை 5ஆம கட்டையில்வைத்து வழி மறித்து வாகனத்தில் வந்தபோராளிகளை வெட்டிக் கொன்றுள்ளனர். கருணா குழுவும், இராணுவத்தினரும் இணைந்து இத்தாக்குதலில் ஈடுபட் டுள்ளனர். இதன்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மேஜர்-புகழமுதன் (கிட்ண பிள்ளை-சிவநேசன் புதுக்குளம் ,கர வெட்டி மத்தி, கரவெட்டி, யாழ்ப் பாணம்),

லெப்டினன்ட்- இறைமாறன். (அருள்ராசா-சஞ்சயன், முனிகோவி லடி,கோப்பாய் தெற்கு, கோப்பாய், யாழ்ப்பாணம்).

ஆகிய போராளிகளே வீரச்சா வடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

## வவு.மாவட்ட அரசியல்துறையினருடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பு அரசியல்துறைப் பணிமனையிலுள்ள சமாதான செயல கத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப் பில் நேற்று முன்தினம் வவுனியா அரசியல்துறைப் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக விரிவாக ஆரா யப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

## அவசர அபாயங்கள் குறித்து அறிவிக்க நிறைவேற்று அதிகாரியை நியமிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

அவசர அனர்த்தங்களுக்கான பாராளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவசர அபாயங்கள் ஏற்படும்போது அதனை நாட்டு மக்களுக்கு தெரியப் படுத்தக் கூடிய அல்லது தகவலைக் கொண்டு செல்லக்கூடிய அதிகாரபூர்வ மான நிறைவேற்று அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் இது தொடர்பான வேண்டுகோள் சனாதிபதியிடம் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமிக்கப்படும் பட்சத் (12ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலத்தில் நாளை மாலை 3.00 மணிக்கு முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது என விசுவமடுப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சு.கார்த்திக் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் இப்பகுதிப் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார் (19)


டய்டோ
பிறப்பிலே முன்னணியில்...
FANCY



▸ 100CC ▸ 4 Gear
▸ Kick & Self Start

(சி-11596)

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்




மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு

ஏக முகவர்

செரென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.

தொலைபேசி 01-2341580-1, 2438779, பக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk

YAMAHA Touching Your Heart

யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்

இடம்- யமஹா பிளாஸா
காலம்- ஏப்ரல்1ஆம்2ஆம் திகதி
நேரம்- காலை9.00-மாலை5.00
யமஹா மோட்டார் கம்பனியும் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள் யமஹா பிளாஸாவும் இணைந்து நடாத்தும் அனைத்து ரக யமஹா மோட்டார் சைக்கிள்களுக்கான இலவச மெக்கானிக் சேவிஸ்
யமஹா கம்பனியின் விசேட தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துகொள்கின்றனர்
இந்நிகழ்வில் அனைத்து யமஹா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்



YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200
0777 563 803

(C-11469)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர்.திருமதி.ஜெயகாந்தன் ஜெயக்குமாரி (றஞ்சி)

மலர்வு 1976 - 01 - 02

உதிர்வு 2005 - 03 - 29



ஜெயக்குமாரி

எமது தமிழீழ நிர்வாகசேவையின் [கிளிநொச்சி மாவட்டம்] பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திருமதி.ஜெயகாந்தன் ஜெயக்குமாரி அவர்கள் 29.03.2005 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமாகிய செய்தி அறிந்து நாம் மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
தமிழீழ நிர்வாக சேவை,
கிளிநொச்சி மாவட்டம்.


(சி.11613)

## கண்ணீர் அஞ்சலி

### மேஜர் புகழமுதன்

கிருஸ்ணபிள்ளை சிவநேசன் (சிவா)
(புதுக்குளம். கரவெட்டி மத்தி, கரவெட்டி.)

01 - 11 - 1977



26 - 03 - 2005

அன்பாய் ஆதரவாய் அன்னை போல் உணவு தந்து.
பண்பாய்ப் பக்குவமாய் அனைவரையும்
அரவணைத்து
உன்பால் கவர்ந்த உத்தமனே புகழமுதா
நின்பால் வைத்த அன்பால் மனமுருகி நிற்கின்றோம்
அண்ணன் வகுத்திட்ட புதுப்பாதைதனிலே புலியாகி
புகழ் நோக்காப் பணி செய்த புகழமுதா.
எதிரி ஏவுகின்ற எறிகணை மழையினிலும்
எதற்கும் அஞ்சாமல் வண்டிகளைச் செலுத்தி
குற்றுயிராய்க் கிடந்த எம் தோழர்
உயிர் காத்தாய்
சண்டை ஓய்ந்திட்ட சமாதான வேளையிலும்
தந்த உன்பணியை சரிவரவே நீ புரிந்தாய்
மட்டு நகர் மறவர்க்கு உணவளிக்கும்
உன்பணிக்கு
தோழனுடன் நீயும் ஊர்தியிலே செல்கையிலே.
ஈனச் செயல் புரியும் கோழைகளின்
சதிச் செயலால் சாவடைந்து நீரும்.
சரித்திரம் ஆகிவிட்டீர்
உமக்கு சாவழித்த கொடியவனின் முற்றமதில்
தலைவன் விழியசைய அக்கினி மழை பொழியும்
இது உறுதி.

பணியாளர்கள்
உணவுப்பகுதி,
நிதித்துறை.

(5900)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# இராணுவப் புலனாய்வுத்துறையினர்

# இரவு வேளைகளில் நடமாட்டம்

(தென்மராட்சி)

**தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவுவேளைகளில் இராணுவ புலனாய் வுத்துறையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

இதனால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் பயப்பீதியுடனும், அச்ச உணர்வுடனும் காணப்படு கின்றனர்.

இராணுவப் புலனாய்வுத்துறை யினரின் இவ்வாறான நடமாட்டங் கள் காரணமாகவே இப்பகுதிகளில் அடிக்கடி குழுமோதல்கள்ஏற்படு கின்றன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இராணுவபுலனாய்வுத் துறையினரின் இந்நடவடிக்கைகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

## தபாற்கந்தோருக்கு அடிப்படைவசதியில்லை

(சுன்னாகம்)

யாழ்.சுன்னாகம் தபாற்கந்தோர் அடிப்படைவசதிகள் எதுவும் இன்றி இயங்கிவருவதால் அதன் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இங்கு தபாற்கந்தோருக்கான இடவசதிகளோ,ஆளணிவசதிகளோ, தளபாடவசதிகளோ இல்லாதுள்ளன.

இதனால் இந்தத் தபாற்கந்தோர் மூலம் பொது மக்கள் பூரண பயன டைய முடியாத நிலையி லுள்ளனர். (33)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுதேச வைத்திய சேவையின் கீழ் செயற்றிட்ட முகாமைத்துவம், புள்ளிவிபரவியல் அபிவிருத்தி, வைத்திய சாலை முகாமைத்துவம், விவசாய அபிவிருத்தி போன்ற வற்றிற்கான "உதவியாளர்" கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு விண் ணப்பிக்கவிரும்புவோர் செய லாளர்,சுதேச வைத்திய அமைச்சு, 330,யூனியன் பிளேஸ்,கொழும்பு- 2 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னராக விண்ணப்பங்களை அனுப்பிவைக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

### -கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு-

## சித்திரபாட ஆசிரியர் நியமிக்கப்படவில்லை

(தென்மராட்சி)

கைதடி விக்கினேஸ்வரா வித்தி யாலயத்திற்கு சித்திர பாடத்திற் குரிய ஆசிரியர் நியமிக்கப்பட வில்லை என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனால் இப்பாடத்தினை கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இப் பாடசாலையில் கட்டடவசதிகள் பற்றாக்குறையாகக் காணப் படுவதால் பெரும் இடநெருக்கடி தோன்றியுள்ளது. இதனால் மாண வர்கள் கல்வி பயில்வதில் பல அசௌ கரியங்களுக்கு உள்ளாகி வருகின் றனர் என அவர் மேலும் தெரி வித்தார். (28)

## படைமுகாம்களைப் பலப்படுத்த பனை,தென்னை மரங்கள் திருட்டு

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் அழிந்து போன படை முகாம் களைப் பலப்படுத்துவதற்காக தென் மராட்சிப் பகுதிகளில் இருந்து படை யினரால் பனை, தென்னை மரங்கள் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப் படுகின்றன

தென்மராட்சியில் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் படையினர் பிரகடனப்படுத்தியுள்ள மிருசுவில், எழுதுமட்டுவாள் பகுதிகளில் பொது மக்களின் காணிகளிலுள்ள பனை, தென்னை மரங்களே படையினரால் தறிக்கப்பட்டு இவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றன.

இரவு1.00 மணிக்கும் அதிகாலை 4.00மணிக்கும் இடையில் இந்த மரங்கள் தென்மராட்சிப் பகுதி களிலிருந்து திருட்டுத்தனமாக படையினரால் படைமுகாம்கள் அமைக்கப்படும் பகுதிகளுக்கு கடத் திச் ·செல்லப்படுகின்றன.

படையினரின் இந்நடவடிக்கை குறித்து பொதுமக்கள் விசனமும், கவலையும் தெரிவித்துள்ளனர். (28).

## பாதை வெட்டிச் சென்றாலே தகனம் செய்ய முடியும்

(நல்லூர்)

காரைநகர் சாம்பலோடை இந்து மயனத்திற்கு தகனக் கிரியை களுக்காகச் செல்பவர்கள் பாதை களை வெட்டிச் சென்றே தகனம் செய்ய வேண்டிய அவல நிலை யில் காணப்படுகின்றார்கள்.

இடப்பெயர்வைத் தொடர்ந்து இம்மயானப்பாதைகள் அழி வடைந்துள்ளதுடன் பற்றைகளும் முட்புதர்களும் மண்டிக்காணப் படுகின்றன.

இதனைத் துப்புரவு செய்ய பிரதேச சபையினர் நடவடிக்கை யெடுக்காமையினால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் சென்று தகனக்கிரி யைகளை மேற்கொள்ள வேண்டிய அவலநிலைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார்கள். (41)

## தொலை பேசிக்கு விண்ணப்பித்த 15 ஆயிரம் பேருக்கு இணைப்பில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொலை பேசி இணைப்புகளைப் பெறுவதற் காக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திடம் விண்ணப்பித்த வர்களில் 15ஆயிரத்திற்கும் மேற் பட்டோருக்கு இன்னமும் தொலை பேசி இணைப்புக்கள் வழங்கப் படவில்லை.

இதனால் தொலை பேசி இணைப்புகளுக்காக விண்ணப் பித்தவர்கள் பெரிதும் ஏமாற்ற மடைந்துள்ளனர். இதன் காரணமாக தபாற்கந்தோர், வைத்தியசாலை, பாடசாலை மற்றும் பொது நிறு வனங்கள் எனப் பலவும் தொலை பேசி இணைப்புகள் இன்மையால் தொடர்பாடல் வசதிகள் இன்றி பாதிக்கப்பட்டுள்ளன. (33)

## தந்தைசெல்வா நினைவுநிகழ்வு

(யாழ்பாணம்)

தந்தை செல்வாவின் 107ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவிடத்தில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறும் என தந்தை செல்வா அறங்காவற் குழு அறிவித் துள்ளது. இந் நிகழ்வில் கட்சிகளின் தொண்டர்களும் முக்கிய உறுப் பினர்களும் பங்குபற்றவுள்ளனர். (33)

## தெருவிளக்குகள் இன்மையால் சமூகச் சீரழிவுகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிராம்பியடி வீதியில் தெரு விளக்குகள் இன்மையால் தொடர்ந்து இரவு வேளைகளில் விபத்துக்களும், திருட்டுச் சம்பவங் களும், சமூக சீரழிவு நடவடிக் கைகளும் அதிகரித்து வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரு கின்றன. இப்பகுதிக்கான பிரதான வீதிக்கு தெரு விளக்குகள் பொருத் தப்படாதது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், யாழ். மின் அத்தியட்சகர் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (28)

## வல்லைவெளிப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதி ஓரமாக வல்லை வெளியை அண்டியுள்ள நிலங்களில் சிறிலங் காப் படையினரால் புதைத்துவைக் கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஹலோட் ரெஸ்ட மிதிவெடிகள் அகற்றும் பிரிவினர் ஈடு பட்டுள்ளனர்.

அப்பகுதியில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகளால் அப்பகுதியை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் இயல்பான நடமாட்டம் அச்சுறுத்தல் களுக்குள்ளாகி இருந்தமையைக் கவனத்தில் கொண்டே இந்நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி இந்து மகளிர் பாட சாலை அபிவிருத்திச்சங்கத்தின் பொதுக்கூட்டம் அடுத்தமாதம் மூன்றாம் திகதி காலை ஒன்பது மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இப் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராயப் படவுள்ளன. (33)

## 2880 குடும்பங்களுக்கு தளபாடங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள2880 குடும்பங் களுக்கு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினர் வீட்டுத்தளபாடங்களை வழங்க வுள்ளனர்.

இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள 2880 குடும்பங் களுக்கு தலா ஒரு கதிரையும், ஒரு மேசையும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டகுடும்பங்களைச் சேர்ந்த கல்வி நடவடிக்கைகளுக்கான தேவையை கவனத்தில் கொண்டே இவை வழங்கப்படவுள்ளன (33).

### -சுனாமியால் பாதிக்கப்பட்ட -

## வடமராட்சிப் பிரதேசத்தில் 20 முன்பள்ளிகள் அமைக்கப்படும்

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ் வடமராட்சிப்பிரதேசத்தில் இருபது முள்பள்ளிகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியமும், வேல்ட் விஷன் நிறுவனமும் முன்வந்துள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்கள் செறிவாக உள்ள பிரதே சங்களில் இந்த இருபது முன்பள்ளி களும் நிறுவப்படவுள்ளன. (33)

## ஆடிபாதம் வீதி சேதம்

யாழ்.நல்லூர் பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள ஆடிய பாதம் வீதி மிக மோசமாகச் சேதமடைந்த நிலை யிலுள்ளதால் பயணிகள்பெரும்சிரமங்களுக் குள்ளாகுகின்றனர்.இதுகுறித்து நல்லூர்பிரதேச சபையினர் கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள ளனர். (33)

## குடிநீரை பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பாரதிவீதிப் பகுதியில் உள்ள மக்கள் தமது குடிநீர் தேவையை நிறைவு செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண் டுள்ளனர்.

இப்பகுதியில் குடிநீருக்கு தற் போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. கோப்பாய் பிரதேச சபை யினர் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே நீர் வழங்கல் செய்து வரு கின்றனர்.

அந்த நீர்வழங்கலும் காலையில் மட்டும் மேற் கொள்ளப்படுவதுடன் இதற்காக பொதுமக்களிடம் இருந்து பணமும்வசூலித்துவருகின்றனர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங் கப்படும் இந் நீர் மூலம் மக்கள் தமது தேவைகளை பூரணமாக நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த அவல நிலையை கவனத் தில் எடுத்து இம்மக்களின்குடி நீர் பிரச்சினை தீர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைஎடுக்க வேண்டும்என இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (28)

# இயற்கை முறையிலான விவசாய உற்பத்தி மாதிரி பண்ணை திட்டத்தில் வெற்றி!

## -ஈச்சங்குளம் பாடவிதான உத்தியோகத்தர் தகவல்

(செட்டிகுளம்)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் இயற்கை முறையிலான விவசாய உற்பத்தியை மேற்கொள்ளும் முகமாக மாதிரி பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி பண்ணை இப்பகுதி மக்கள் மத்தியில் பாரிய வெற்றியை அளித்து வருவதாக பாடவிதான உத்தியோகத்தர் சி. சிவபாதசுந்தரம் தெரிவித்தார். எந்த விதமான பக்கவிளைவுகளும் இல்லாமல் இயற்கையான சேதனப் பசளைகளை பாவிப்பதன் காரணமாக மரக்கறிக்கோ அல்லது மரக்கறியை உண்ணுபவர்களுக்கோ எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த உற்பத்தியின் மூலமாக அதிகளவான உற்பத்தியையும், பலனையும் பெறக் கூடியதாக இருப்பதாகவும், இப்பகுதியில் இந்த உற்பத்தி விவசாயிகள் மத்தியில் பிரபல்யமாகி வருவதாகவும், இதில் ஈடுபட்டு வருகின்ற விவசாயி திருமதி. ம.விக்னேஸ்வரன் தெரிவித்தார். பொஸ்டோ நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பெண்கள் இந்த வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கான நிதியுதவியை போரூட் நிறுவனம் வழங்க விவசாயத் திணைக்களம் போதனைகளை மேற்கொண்டு வருகின்றது (21)

# சுனாமி முன்னெச்சரிக்கையால் மன்னாரிலும் அல்லோலகல்லோலம்

(மன்னார்)

சுனாமிக்கடல் பூகம்பப் பேரனர்த்தம் இடம்பெறும் என்று நேற்று முன்தினம் இரவு ஊடகங்கள் மூலம் தெரிவித்த தகவலையடுத்து மன்னாரில் கடற்கரையோரப் பிரதேசமக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். இதனையிட்டு கரையோரப் பிரதேசமான வங்காலை, அரிப்பு, பேசாலை தாழ்வுப்பாடு போன்ற கிராமங்களில் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். பின்னர் நேற்றுக்காலை இவ் அனர்த்தம் இடம்பெறாதென அறிவித்ததையடுத்து மக்கள் தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். (18)

# தியாகி அன்னை பூபதி நினைவாக சிரமதானப்பணி

(மன்னார்)

தியாகி அன்னை பூபதியின் நினைவு நாட்களை முன்னிட்டு மன்னாரில் சிரமதானப்பணி இடம்பெறுகின்றது. கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் மன்னார் தாழ்வுப்பாடு ,கீரி ஆகிய கிராமங்களின் வீதிகள் சுத்தம் செய்யப்பட்டு சிரமதானப்பணி இடம்பெற்றது. இதில் 50 இற்கும் மேற்பட்ட மாதர் சங்கத்தவர்கள், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் உட்படபலர் கலந்து கொண்டு சிரமதானப்பணியினை செய்துள்ளனர். (18)

# தெங்கு செய்கையை அபிவிருத்தி செய்ய சிறிலங்கா அரசு உதவியளிக்க மறுப்பு!

## கிளி. மாவட்டத்தில் சுமார் இருபது இலட்சம் தென்னைகள் அழிப்பு

**“தென்னை அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முன்வராததனால் தென்னை அபிவிருத்திசபை மட்டுமே தன்னாலான வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.” இவ்வாறாக தென்னை அபிவிருத்தி அலுவலர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் நடவடிக்கையின் போது 25000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தேங்காயின் விலை அதிகரிக்கப்பட்டதுடன், வருங்கால சந்ததியினரும் நிரந்தரமான வருமானத்தைப் பெற முடியாது போனதுடன் எமது வளமும் முற்றாக அழிந்துள்ளது. சிறிலங்கா அரசானது தென்னை அபிவிருத்திக்கான திட்டம் எதனையும் மேற்கொள்ளவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் 20 இலட்சத்திற்கு மேலான தென்னைகள் போரினால் அழிக்கப்பட்டிருந்தும், தற்போது நிலவிவரும் சமாதான காலத்திலும், தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி தென்னை உற்பத்தி நடவடிக்கைக்கு அபிவிருத்தி மேற்கொள்ளாது இருப்பதைக் கண்டு தென்னை அபிவிருத்தி சபையினர் தம்மாலான உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் தென்னை உற்பத்தி மீள் நடுகை மந்த கதியாகவே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கட்டாக்காலிகள் தொல்லை!

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் மாடுகளைக் கட்டி வளர்க்கும் எல்லை 15.04.2005 எனப் பிரதேச செயலகக் கூட்டத்திலும், கமக்கார அமைப்புக்கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டபோதிலும் இதுவரை இந் நடவடிக்கைக்கு மக்கள் ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை. இது விடயமாக கமக்கார அமைப்புத் தலைவர்கள் கவனம் எடுக்க வேண்டுமென விவசாயிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(34)

# அரசியல்துறை செயலகம் மீதான தாக்குதல் பாரதூரமானது

## - நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

வவுனியாவில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தை நீதிபதி எம்.இளஞ்செழியன் நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும், பொலிசாரும் சென்றனர்.

இந்தத் தாக்குதல் பாரதூரமான விடயமாகும் என்றும் அரசியல் பணிகளுக்காக பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாவட்ட அலுவலகத்தை நடத்தி வருகின்றவர்கள் மீது நடத்தப்பட்டுள்ள விடயம் குறித்துப் பொலிசார் துரிதமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் நீதிபதி அப்போது கேட்டுக்கொண்டார். காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக கப்பட்டவர்களுடைய வாக்குமூலங்களையும் நீதிபதி தலைமையிலான குழுவினர் பெற்றனர்.

# தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வுக்கு அழைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வு நாளைய தினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை பேராளர் சங்கம நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி பிரதேச அரசியல்துறை மற்றும் தேசிய எழுச்சிப்பேரவையினர் வேண்டியுள்ளனர். (சோ)

# மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர் நியமனம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் நீண்டகாலமாக இல்லாது இருந்த மகப்பேற்று சத்திர சிகிச்சை நிபுணர் வெற்றிடம் தற்போது நிரப்பட்டுள்ளது.

டாக்டர் ஜெயக்குமார் என்பவரே நேற்று முன்தினம் மன்னார் பொது வைத்தியசாலையில் நியமனம் பெற்று தமது பணியை ஆரம்பித்துள்ளார். (18)

## -சுனாமி பேரலைத்தாக்கத்தினால்-

# முல்லையில் நூறு பிள்ளைகள் தாயையும், தந்தையையும் இழந்தனர்

(முல்லைத்தீவு)

சுனாமி பேரலை தாக்கத்தினால் முல்லைத்தீவில் மட்டும் நூறு பிள்ளைகள் தமது தாயையும், தந்தையையும் இழந்துள்ளனர் என முல்லை அரச செயலகம் தெரிவித்துள்ளது.

தாயை மட்டும் 349 பிள்ளைகள் இழந்துள்ளனர். 130 பிள்ளைகள் தந்தையை மட்டும் இழந்துள்ளனர்.

மேலும் சுனாமி பேரலையால் இப்பகுதியில் மட்டும் 90 கர்ப்பவதிகள் உயிரிழந்துள்ளனர் என அரச செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (20)

# கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன புதிய கட்டடத் திறப்பு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரனையுடன் கள்ரச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன அலுவலக கட்டடம் ஒன்று புளியம்பொக்கணைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் 3.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தலைமையில் இடம் பெற்ற இத்திறப்புவிழா நிகழ்வு சுடரேற்றலுடன் ஆரம்பமாகியது. நிகழ்வில் தேசியக்கொடியினை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் அதியமான் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து அலுவலகக் கட்டடத்தின் பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலகக் கட்டடத்தினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கெங்காதரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இதனையடுத்து தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. தர்மபுரம் பாடசாலை அதிபர் உட்பட கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கெங்காதரன், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர். இன்றைய இந்த கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் தர்மபுரம் பங்குத்தந்தை, கிராம சேவையாளர், சுகாதாரத் தொண்டர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# கிளிநொச்சி மகளிர் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச மகளிர் சங்கங்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் கிளி.பிரதேச மகளிர் அரசியல் துறை செயலகத்தில் நடை பெற்றது.

கிளி.பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழில்மதியின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற சந்திப்பின்போது கிளி.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளா பூவிழி கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

மேற்படி சந்திப்பின் போது நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் 17 ஆவது ஆண்டு நினைவாக கிராம ரீதியாக சிரமதானப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் பிரதேசமட்ட மகளிர் சங்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (சோ)

# உந்துருளி விபத்தில் யுவதி காயம்!

(கிளிநொச்சி)

தருமபுரம் -கட்டைக்காடு பகுதியில் உந்துருளி விபத்தில் யுவதியொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் வட்டக்கச்சியில் இருந்து தருமபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த உந்துருளியும் தருமபுரத்தில் இருந்து கல்மடு நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளியும் மோதிக் கொண்டதில் வட்டக்கச்சியைத் சேர்ந்த (சகிலா-சிவப்பிரகாசம், வயது-26) என்ற யுவதி காயமடைந்துள்ளார். (15)

# சுதேச மருத்துவர்களுடன் இன்று கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட அனைத்து சுதேச மருத்துவர்களுக்கும் சுதேச மருத்துவசிகிச்சை அபிவிருத்தி என்பன தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ நிர்வாக சேவை கிளி.மாவட்ட ஒன்று கூடல் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட சுதேச மருத்துவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# சுனாமி அச்சத்தால் ஓடியோர்கள் மீது வாகனம் மோதியது!

## -அம்பாறையில் ஒருவர் படுகாயம்

சுனாமி கடல் அனர்த்த அச்சத்தால் அம்பாறைமாவடிப் பிலவில் ஓடிய மக்கள் கூட்டத்தில் வாகனம் ஒன்று மோதியதில்ஒருவர் படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையிலுள்ளார்.

மேற்படி விபத்தில் காயமடைந்தவரை ஏற்றிச் செல்ல அவ்வழியால் வந்த இராணுவ அம்பியூலன்ஸ் வாகனத்தை மக்கள் மறித்த போதிலும் அவர்கள் சம்பந்தப்பட்ட வரை ஏற்றிச் செல்ல மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

# சட்டவிரோதமாக சாராயம் விற்றவர் வவுனியா பொலிசாரால் கைது

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் சட்டவிரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை வவுனியாப் பொலிசார் கைது செய்துள்ளனர். கைது செய்த நபரை பொலிசார் நேற்று முன்தினம் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிட்ட நபரிற்கு ஐநூறு ரூபா தண்டப்பணம் கட்டுமாறு உத்தரவிட்டார். (10)

# ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கச் செய்யும் மருந்து ஸ்கொட்லாந்து நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

**மனிதனின் ஆயுளை முப்பது ஆண்டுகள் நீடிக்கச் செய்யும் மருந்தை ஸ்கொட்லாந்து நாட்டு விஞ்ஞானிகள் தொடர்ச்சியான ஆய்வுகளின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்**

மனிதனின் வாழ்நாளை அதிகரிப்பதற்காக விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் காலாகாலமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகின்றனர். இதுவரை அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை.

இப்போது அந்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஸ்கொட்லாந்து நாட்டில் உள்ள அபேர்தீன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கும் மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றி அந்தப் பல்கலைக் கழப் பேராசிரியர் ஜான்ஸ்பீக் மேன் கூறுகையில்;

நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை சாப்பிட்டால் அது அவரை ஆரோக்கியமாக இருக்கச்செய்கிறது. நீண்ட நேரம் உழைப்பதற்கு உதவுகிறது. ஆயுளை 30 ஆண்டு கள் நீடிக்கச் செய்கிறது" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் "ஜீன்களில் ஏற்படும் ரசாயன மாற்றத்தை மாற்றுவதன் மூலம் செல்களுக்கு வயதாவதைக் குறைக்க முடியும். ரசாயன மாற்றத்தின் வேகத்தை அதிகரிப்பதன் மூலம் வாழ்நாளை அதிகரிக்கச் செய்ய முடியும்.

இந்த வேலையைச் செய்வதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது சோதனை முறையில் ஒரு எலிக்குக் கொடுக்கப்படும். அடுத்த நான்கு ஆண்டுகளில் எலி அதிககாலம் உயிருடன் இருக்க அந்த மருந்து உதவுகிறதா என்று கண்காணிக்கப்படும்.

சோதனை முடிந்தபிறகு இந்த மருந்து விற்பனைக்கு வரும். மனிதர்கள் எந்த வயதில் இந்த மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து வருகின்றார்கள் என்றார்.

## அமெ,ரஷ்ய வீரர்கள் விண்வெளியில் நடந்து சென்று அன்ரனாவைப் பொருத்தினர்

வானொலியில் உள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் அமெரிக்க வீரர் லெராய் சியாவோ, ரஷ்ய வீரர் சலிஷான் ஷாரிபோவ் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

அவர்கள் இரண்டு பேரும் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை விட்டு வெளியேறி வான் வெளியில் நடந்து ஐரோப்பிய ஆட்டோ மேட்டட் டிரான்ஸ்பர் வாகனத்தில் ஒரு அன்ரனாவைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டனர். இதனால் ஆறு மணி நேரத்துக்கு விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் யாருமே இல்லாத நிலை ஏற்பட்டது.




அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சின் பிரதிச் செயலர் டேவிட் சற்றபீல்ட் லெபனான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமட் கமாட்டுடன் நேற்று பெய்ரூட்டில் பேச்சுவார்த்தை நடத்தும்போது.

# பக்ரைனில் வேலை செய்த இந்தியர் மர்மச்சாவு விசாரணை செய்யக் கோரி தொழிலாளர் போராட்டம்

(துபாய்)

பக்ரைன் நாட்டில் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்த்த இந்தியத் தொழிலாளி மர்மமான முறையில் இறந்தார். இந்த மரணம் குறித்து விசாரணை நடத்தக் கோரி அங்கு வேலை பார்த்த 400 தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இயந்திரங்களை உடைத்து எறிந்தனர்.

ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மது பாபு. 25 வயதான இவர் ஒரு தையல் கலைஞர். எட்டு மாதங்களுக்கு முன்பு இவர் பக்ரைன் நாட்டுக்குச் சென்றார். அங்கு உள்ள ஆடை தயாரிப்பு கம்பனியில் அவர் வேலைக்குச் சேர்ந்தார். அங்கு அவர் இடைநிலை அதிகாரியாக வேலை செய்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அவரை சின்னம்மை தாக்கியது. இந்த நிலையில் அவர் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள தனி அறையில் மின்விசிறியில் பிணமாகத் தொங்கினார். தொழிற்சாலை நிர்வாகம் அவர் தற்கொலை செய்து கொண்டதாக அறிவித்தது.

இதை அங்கு வேலை செய்யும் 400 தொழிலாளர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. "கம்பனி' தொழிலாளர்களை மோசமாக நடத்தியதால் அவர் தற்கொலை முடிவுக்கு வந்து இருக்கலாம் என்று கம்பனிநிர்வாகம் தெரிவித்துள்ளது. அவர்கள் இந்த மர்ம மரணம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் போது இயந்திரங்களை உடைத்தனர்.

மதுபாபு இறந்து கிடக்கிறார் என்ற தகவல் கிடைத்ததும் தொழிலாளர்கள் இயந்திரங்களையும், கார்களையும் உடைத்து எறிந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தொழிற்சாலை மூடப்பட்டது. பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்த பிறகே தொழிற்சாலை திறக்கப்படலாம் என்று தெரிகிறது.

இதற்கிடையில் பக்ரைன் மனித உரிமைக்குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி தொழிலாளர் நல மந்திரிக்கு கடிதம் எழுதி யுள்ளது.

தொழிலாளர்கள் இந்தியத் தூதரகத்திடமும் மனு கொடுத்துள்ளனர். நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் கோரி உள்ளனர்.



ஈராக்கின் கிர்கிக் நகரில் கார்க்குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தைப் பார்வையிடும் அமெரிக்கப் படையினர்

# புற்றுநோய் பீதியால் விமான சேவை குறைப்பு

புற்றுநோய் பீதியால் விமான போக்குவரத்து எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. கத்தே பசிபிக் ஏர்லைன்ஸ் நிறுவனம், ஹொங்கொங்கில் இருந்து நியூயோர்க் நகருக்கு வழியில் தரிப்பின்றி. நேரடி விமானப் போக்கு வரத்துச் சேவை நடத்துகிறது.

வடதுருவப் பகுதியின் மீது இந்த விமானம் பறக்கும் போது அதிகபட்ச கதிரியக்கத்திற்குப் பயணிகள், விமானச்சிப்பந்திகளும் உட்படுவதால் புற்றுநோய் தாக்கலாம் என்ற பீதி ஏற்படடுள்ளது. இதனால் இந்த விமானப் பொக்குவரத்துச் சேவை எண்ணிக்கை மாதத்துக்கு இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# சுமத்திராவிற்கு அண்மித்த பூகம்பத்தால் நியாஸ் தீவில் 300 பேர் பலி;

## ஐ.நா.சபை இணைப்பாளர் தெரிவிப்பு

சுமத்திரா தீவிற்கு அருகில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் நியாஸ்தீவின் பிரதான நகரம் 75 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளதோடு முன்னூறுக்கு மதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் திடீர் அனர்த்தம் தொடர்பான இணைப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையை பிரதான தொழிலாகக் கொண்ட நியாஸ் தீவில் இதுவரை மூவாயிரத்திற்கும அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இத்தீவிலுள்ள பெரிய கட்டடம் ஒன்றுக்குள் ஏராளமானவர்கள் சிக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களை அங்கிருந்து மீட்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிவாரணக் குழுக்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

உலங்குவானூர்திகள் மூலம் இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் திடீர் அனர்த்தம் தொடர்பான இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.



சுமாத்திராவில் பெயுனாயொங் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நிகழ்ந்த பூமியதிர்ச்சியினால் கற்குவியலாகக் காட்சி தரும் கட்டடங்கள்.

# ஈருருளியில் குண்டு வெடித்து ஈராக்கில் இரு பொலிசார் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் புனிதத்தளமான நஜாப் அருகே நேற்று முன்தினம் ஈருருளியில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஈராக் பொலிசார் இரண்டு பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் பாதுகாப்புப் படையினர் மீது தீவிரவாதிகள் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றனர். புனித நகரமான நஜாப்பில் கடந்த சில நாட்களாக இந்தத்தாக்குதல் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினமும் நடைபெற்றுள்ளது. இந்தத்தாக்குதல் அடை யாளம் தெரியாத மர்ம நபர் வெடி குண்டு வைக்கப்பட்ட ஈருருளி ஒன்றை பொலிஸ் வாகனத்தின் அருகே நிறுத்திவிட்டுச் சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்திற்குள் ஈருருளியில் குண்டு வெடித்தது. இச்சம்பவத்தில் ஈராக் பொலிசார் இரண்டு பேர் பலியாகினர். மேலும் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிசார் உட்பட சிலர் படுகாயமடைந்தனர்.

# நான்கு மாதமாக சவுதி சவச்சாலையில் தவம் கிடக்கும் இந்தியரின் சடலம்!

(றியாத்)

சவுதி அரேபியாவில் மதீனா நகரில் விடுதி தொழிலாளியாகப் பணியாற்றியவர் ஷாகித் இமாம்கான் இந்தியாவில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இவருக்கு பித்தப்பையில் கட்டி ஏற்பட்டது. இதை அகற்றுவதற்காக சத்திரசிகிச்சை செய்தபோது இவர் இறந்து போனார் அவரது உடலை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு சவுதி அரசாங்கத்திடம் இருந்து இன்னமும் அனுமதிகிடைக்கவில்லை. இதனால் அவர் உடல் நான்கு மாதங்களாக வைத்தியாசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் இறந்த அவரது மருத்துவ ஆவணங்கள் இன்னமும் தூதரகத்துக்கு அனுப்பப்படவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.



வடகொரியாவில் இருந்து தென்கொரியாவிற்கு வரும் கார் ஒன்றுக்கு தொற்றுநோய்க்கிருமிகளைக் காவிச்செல்லாதிருக்க எல்லைப் பகுதியில் வைத்து தென் கொரியா அதிகாரிகளால் கார் முழுவதும் மருந்து விசிறப்படுகிறது.

# சமாதானத்திற்கான புலிகளின் அர்ப்பணிப்பை பலவீனமாகக் கருதும் ஆட்சியாளர்



**யுத்த** காலத்திலும் சரி, யுத்த நிறுத்த காலத்திலும் சரி சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரே நிலைப்பாட்டையும், விடுதலைப்புலிகள் குறித்து ஒரே பார்வையையும் கொண்டவர்களாகவுமே உள்ளனர். தமது நிலைப்பாடு அரசியல் - இராணுவ சூழ்நிலைக்கு ஏற்றதா? யதார்த்தபூர்வமானதா? புலிகள் தொடர்பான மதிப்பீடு சரியானதா? என்பது குறித்து அவர்கள் ஆராய்வதாகவோ, மறுபரிசீலனை செய்ததாகவோ இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால் கடந்த கால வரலாற்றைக்கூட அவர்கள் ஞாபகத்தில் கொள்வதாகவோ அதிலிருந்து பாடம் கற்றதாகவோ இல்லை.

சிறிலங்கா அரசைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பது இரண்டாம் பட்சமானதொன்றே. அதாவது, தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான இராணுவ ரீதியில் ஒடுக்குதல் - அது உடனடியாகச் சாத்தியப்படாது போகும் பட்சத்தில் அதற்கான தயாரிப்பிற்குச் சந்தர்ப்பத்திற்குக் காத்திருத்தல்; காலத்தை எடுத்தல் என்பதே அதன் நிலைப்பாடும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளும் இதன் அடிப்படையிலானதே ஆகும். இதனை இங்கு விரிவாகத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கும் எனக் கருதவில்லை. ஏனெனில், சந்திரிகா அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கைகள் இவற்றைத் தெளிவுபடுத்து பவையாகவே உள்ளன. யுத்த நிறுத்தத்தினையும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும் அரசியல் தீர்விற்கான சந்தர்ப்பத்தையும் ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை/ விரும்பவில்லை என்பதே யதார்த்த நிலையாகும்.

இன்றைய ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற விடயத்தில் - பலமான கருத்து முரண்பாடு உண்டென்பது இன்று வெளிக்காட்டப்படும் /வெளிப்படுத்தப்படும் விடயமாகும். ஆனால், ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் அத்தகைய முரண்பாடு உள்ளதோ இல்லையோ அரசாங்கம் இதனையும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை காலம் தாழ்த்துவதற்கு / இழுத்தடிப்புச் செய்வதற்குத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதே நிதர்சனமானதாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரம், தமது சுதந்திரக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி ஆகியவற்றின் உதவியுடன் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியும். அவ்வாறுதான் இல்லாதுவிடிலும், சில பரீட்சார்த்த முயற்சிகளையாயினும் மேற்கொண்டு சூழ்நிலையை மதிப்பிட்டிருக்க முடியும்.

ஆனால், அத்தகைய செயல் எதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டதாக இல்லை. இந்நிலையில், தென்னிலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக வெளிப்படுத்தப்படும் அறிவிப்புக்களில் ஆளும் கட்சியின் பங்களிப்பும் இருக்கவே செய்கின்றது எனக் கொள்வது தவறாக மாட்டாது. ஆகையினால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்பது ஆளும் கட்சியைப் பொறுத்து இரண்டாம் பட்சமானதாகவும், அவசியமற்றதொன்றாகவும் கொள்ளப்படுவதாகவே அர்த்தம் கொள்ள முடியும்.

இதனை அண்மையில் பி.பி.சி. செய்திச் சேவைக்குப் பேட்டி ஒன்றை அளித்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் வெளிப்படுத்தாமல் இல்லை. அவர் தனது பேட்டியில், "விடுதலைப்புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை" எனத் தெரிவித்திருந்தார்.

இந்த வகையில், அரசியல் சூழ்நிலைகள், பிறநெருக்கடிகள் என்பனவற்றைக் காரணம் காட்டி இனப்பிரச்சினை புறம்தள்ளுவதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், தற்பொழுது சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவம் தொடர்பான விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என அரசாங்கத் தரப்பினர் கூறத் தொடங்கியுள்ளனர்.

சனாதிபதி சந்திரிகாவில் இருந்து அவரது வெளிவிவாகர அமைச்சர் கதிர்காமர், சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே போன்றவர்கள் உள்ளடங்கலாக இப்பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவது உறுதி என்பது போன்றும், இதற்காக எத்தகைய சவால்களையும் எதிர்நோக்கத் தயாராகவுள்ளது போன்றும் பேசி வருகின்றனர்.

ஆனால், அடிப்படையில் பொதுக்கட்டமைப்பிற்கு ஒரு பலமான முட்டுக்கட்டையைச் சனாதிபதி சந்திரிகாவே போட்டுள்ளார் என்பதே உண்மை நிலையாகும். அதாவது நோர்வே தயாரித்த பொதுக்கட்டமைப்பு வரைவுத் திட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ள திருத்தங்களே அவையாகும்.

நோர்வே அரசு பொதுக் கட்டமைப்பு வரைவு என்று ஆலோசித்தபோதே இரு தரப்பினர் இடையேயும் (சிறிலங்கா அரசு - விடுதலைப்புலிகள்) இணக்கம் காணப்படாத விடயங்களிலேயே தனது தீவிர கவனத்தைச் செலுத்தியிருக்கும் என்பது வெளிப்படையானது. ஆகையினால், அத்தகைய விடயங்களில் இரு தரப்பும் இணங்கிவரக் கூடிய திட்டம் ஒன்றையே அது வரைவு செய்திருக்க முடியும்.

இத்தகைய வரைவில் தமக்குப் பாதகமான, - தமது நிலைப்பாட்டிற்கு ஒவ்வாத சில விடயங்கள் இடம்பெற்றிருந்தபோதும், விடுதலைப்புலிகள் அதனை ஏற்றுக்கொண்டனர். ஏனெனில், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும் என்பது அடிப்படை நோக்கமாக இருந்தது. மற்றும் நோர்வேயின் முயற்சிக்கு மதிப்பளித்தல் என்பதன் அடிப்படையிலும் அது இருந்தது.

ஆனால், நோர்வே தயாரித்த அப்பொதுக்கட்டமைப்பு வரைவிலேயே அரசாங்கம் மாற்றங்களைக் கோரியுள்ளது. இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு என்பது விரைவில் அமுலாக்கம் பெறும் என எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகையினால், நோர்வேயின் திட்ட வரைபிலும் ஏற்கனவே அரசாங்கம் கொண்டிருந்த நிலைப்பட்டின் அடிப்படையிலேயே மாற்றம் செய்யக் கோரவில்லை என எவ்வாறு கூற முடியும்? அத்தோடு, அரசாங்கம் மேற்கொண்ட திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு மேலும் விடுதலைப்புலிகள் அமைப்பினால் விட்டுக் கொடுப்புக்களைத் மேற்கொள்ளத்தான் முடியுமா?

இந்த வகையில் இனப்பிரச்சினை தொடர்பான அரசியல்தீர்வு விடயத்திலும் சரி, தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகள், நெருக்கடிகள் தொடர்பான விடயத்திலும் சரி சிறிலங்கா ஆட்சியாளர்கள் ஒத்ததொரு கொள்ளையைக் கொண்டவர்களாகவே உள்ளனர். இவர்களின் கொள்கையானது இனப்பிரச்சினைத் தீர்விற்கு எப்பொழுதுமே இசைவானதாக இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு தொடர்பாக இத்தகையதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள சிறிலங்கா அரசாங்கம் - குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவும், அவரது பரிவாரத்தினரும் விடுதலைப்புலிகள் தொடர்பாக ஆரம்பம் முதலே தவறானதொரு மதிப்பீட்டைக் கொண்டவர்களாகவும், வெளிப்படுத்துபவர்களாகவுமே இருந்து வருகின்றனர்.

அதாவது, விடுதலைப்புலிகள் யுத்தம் புரிந்து கொண்டிருந்தபோதிலும் சரி, யுத்த நிறுத்தத்தை அறிவிப்புச் செய்துள்ளபோதிலும் சரி யுத்தநிறுத்த காலத்திலும் சரி விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கின்ற போதெல்லாம் அரசாங்கத் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்தின் ஒரு பகுதியானது விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டுப் போய்விட்டனர் என்பதாகவே இருந்தது.

யாழ். குடாநாட்டில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறி வன்னியில் நிலைகொண்டபோது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகள் பலவீனப்படுத்தப்பட்டுவிட்டனர் எனப் பெரும் மகிழ்வு கொண்டாடியது. விடுதலைப்புலிகள் இயக்கம் முல்லைத்தீவு படைத்தளத்தைத் தாக்கி அழித்தபோதும், அரசாங்கம் புலிகள் இயக்கம் பலவீனப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில், ஜயசிக்குறு நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்து பெரும் படை எடுப்பொன்றை வன்னிப் பெரும் நிலப்பரப்பின் மீது நடத்தியபோது விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்ப்பினால் சந்தித்த - பேரிழப்பின் காரணமாக இப்படை நடவடிக்கை தடைப்பட்டது. இந்நிலையிலும், விடுதலைப்புலிகள் அமைப்பு பேச்சுவார்த்தைகள் குறித்து சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியபோதும் அரசாங்கம் அதனைப் புலிகளின் பலவீனம் என்றே பிரச்சாரம் செய்தது.

அன்று சனாதிபதி சந்திரிகாவின் கரங்களாக விளங்கிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்தவத்தவும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகளை விதித்தனர். இவர்களில் அனுருத்த ரத்வத்த புலிகளைத் தோற்கடித்த பின்பே பேச்சுவார்த்தை என்றார். லக்ஷ்மன் கதிர்காமரோ ஆயுதங்களைப் புலிகள் கீழே வைத்துவிட்டு, நிபந்தனை எதுவுமின்றி பேச்சுவார்த்தைக்கு முன்வந்தாலே சாத்தியம் என்றார். இதனால், நோர்வேயின் ஆரம்ப கால முயற்சிகள் கூடத்தோற்றுப்போயின.

இவை யாவும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாத நிலையிலும், புலிகள் பலமிழந்துவிட்டார்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டவையாகும். ஆனால், ஜயசிக்குறு நடவடிக்கை தோற்கடிக்கப்பட்டு ஓயாத அலைகள் - III நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் பெரும் படைத் தளத்தைக் கைப்பற்றி யாழ்ப்பாணக் குடாநாட்டின் நுழைவாயிலில் நின்று கொண்டு ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோதும், சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாக இல்லை. விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்துவிட்டதாகவே கூறிக் கொண்டனர்.

இதன் விளைவானது புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த காலக் கெடு முடிவடைந்த சில மணி நேரத்திற்குள் தீச்சுவாலை என்று பாரிய படை நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டது. அதாவது விடுதலைப்புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரியளவிலான தயாரிப்புடன் இப்படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இது நான்கு நாள் கடும் எதிர்த்தாக்குதலின் மூலம் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் யுத்த நிறுத்தம் உருவாகி மூன்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் - சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியல்தீர்வு என்பன தொடர்பான வற்புறுத்தல்கள் விடுதலைப்புலிகளால் அதிகரிக்கப்படும் வேளைகளில் எல்லாம் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுப்போயுள்ளனர் - இதன் விளைவாகவே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவப் பொதுக்கட்டமைப்பு போன்றவற்றில் தீவிர அக்கறை கொண்டுள்ளனர். இதன் மூலம் தம்மைப் பொருளாதார அரசியல் ரீதியில் வலுப்படுத்திக் கொள்ள முனைகின்றனர் என அரசாங்கத் தரப்பினர் வியாக்கியானம் செய்யத் தவறவில்லை..

இத்தகைய தமது வியாக்கியானத்திற்கு - இரண்டு காரணிகளையும் ஆட்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

01) கருணாவின் வெளியேற்றமானது புலிகளின் போரிடும் வலுவைப் பெரிதும் குறைத்துள்ளது.

02) சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தினால் கடற்புலிகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். அவர்களின் மொழியில் கூறுவதானால், சுனாமி கடற்புலிகளை அள்ளிச் சென்றுவிட்டது.

அதாவது, கருணாவின் வெளியேற்றமானது விடுதலைப்புலிகளின் தாக்குதல் வலுவைக் குறைத்துவிட்டது. பல ஆயிரக் கணக்கான போராளிகள் புலிகள் இயக்கத்தை விட்டு வெளியேறிவிட்டனர். தாக்குதல்களை எதிர்கொள்ளப் புலிகளிடம் போதிய படைப்பலம் இல்லை, வழி நடத்தக் கருணா போன்ற தளபதிகளும் இல்லை என்பதே அவர்களின் கற்பிதமாகும். ஆனால், விடுதலைப்புலிகளின் முதற்கட்ட நகர்விற்கே கருணா முகம் கொடுக்காது தப்பியோடியதையும், கருணா சிறிலங்கா ஆயுதப் படையின் ஒத்துழைப்பின்றி செயற்பட முடியாது இருப்பதையும் அவர்கள் மறந்துள்ளமை வேடிக்கையானது.

அடுத்ததாக சுனாமியினால், ஆயிரக் கணக்கான கடற்புலிகளும், அவர்களின் போர்ப் படகுகளும் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாக சிறிலங்கா சனாதிபதி உட்படப் பலரும் நம்புகின்றனர். சுனாமியின் பின் முதல் தடவை கருத்துத் தெரிவித்த போதே சனாதிபதி சந்திரிகா இது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆகையினால், விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முன்னெடுக்கும் நடவடிக்கைகள் யாவுமே புலிகளின் பலவீனம் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இதன் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேச விரோதக் குழுக்களின் நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தவும் பதற்றமானதொரு சூழ்நிலையைத் தோற்றிவிப்பதிலும் அரசாங்கம் அக்கறை கட்டி வருகின்றது.

அதாவது, கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீண்டுமொரு தடவை தவறான மதிப்பீட்டின் அடிப்படையில் அது நகர்வுகளை மேற்கொண்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் பல தடவைகள் அரசாங்கத்தின் மறைமுகப் போர் மற்றும் யுத்த நிறுத்த மீறல்கள் என்பன குறித்து எச்சரித்துள்ளபோதும்; தாம் பொறுமையின் எல்லைக்கு வந்துள்ளதாகவும் புலிகளைச் சீண்ட வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளபோதும்; அரசினதும்,அதன் ஆயுதப் படைத் தரப்பினரதும் நடவடிக்கைகள் இதற்குச் இசைவானதாக இல்லை.

இத்தகைய அரசின் நடவடிக்கைகள் யுத்த நிறுத்தத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி வருவதாகவே கொள்ள வேண்டியதாகவுள்ளது. அதாவது விடுதலைப்புலிகளின் விட்டுக் கொடுப்புக்களையும், சமாதான முயற்சிகளுக்கான அனுசரித்த போக்கையும் அரசாங்கம் பலவீனமாகவே கருதுமேயானால் இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் தவிர்க்கப்பட முடியாதாகிவிடும்.

**ஜெயராஜ்**

# 21.03.2005 - 27.03.2005




**21**

☞ பொலநறுவை தீவுச்சேனைப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் தேச விரோதக் குழுவைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்தனர்.

☞ சுனாமி நிவாரணம் தமக்கு சரியாக பகிர்ந்தளிக்கவில்லையென்க் கோரிய திருமலை மக்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

☞புதூர்ப் பகுதியில் "ரகுபதி" குடியிருப்புத் திட்டம் திறப்பு.



☞மட்டு.ஓட்டமாவடியில் முஸ்லிம் வர்த்தகர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

☞ கிளிநொச்சிஅம்பாள்குளம் கிராமத்தில் "குமா" சிறுவர் பூங்கா திறப்பு.



☞வடமராட்சி கிழக்கில் 155 வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு கையளிப்பு.



☞சிறிலங்கா கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் திருமணம் சென்னையில் இடம் பெற்றது.



☞ சிறிலங்கா இராணுவவீரர் ஹெயிட்டியில் உயிரிழப்பு.

☞ மட்டக்களப்பில் முஸ்லிம் வர்த்தகர் சுட்டுக்கொலை.

☞தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் ஜெனீ வாவில் சர்வதேச மன்னிப்புச் சபையின் மனித உரிமைகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



**22.**

☞ கொழும்பில் இடம் பெற்ற கைக்குண்டு வீச்சில் ஐந்து பேர் காயம்.

**23**

☞ வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் படுமோசமாக தாக்கப்பட்டதை தொடர்ந்து இராணுவத்தினருக்கும் - மக்களுக்குமிடையே முறுகல்.

☞ அக்கரைப்பற்றில் உந்துருளியில் சென்றவர் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

☞ வடமராட்சி கிழக்கில் வெவ்வேறு இடங்களில் 220 தற்காலிக வீடுகள் கையளிப்பு.



☞ சிதம்பரபுரத்தில் மூன்று எலும்புக் கூடுகள் மீட்புக்குறித்து முதற்கட்ட விசாரணை வவுனியா நீதிமன்றில் ஆரம்பம்.

☞ இலங்கையில் தங்கியிருந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் நாடு கடத்தப்பட்டார்.

**24.**

☞ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் ஒஸ்ரிய வெளிநாட்டலுவல்களிற்கான சமஷ்டி அமைச்சக மனிதநேய உதவிகள் திணைக்களத்தலைவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைவடையும் நிலைக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளதென தெரிவிப்பு.



☞ சுனாமியால் தொழில் வாய்ப்புக்களை இழந்த வடமராட்சியின் கரையோரக் கிராமங்களிற்கு அயற் கிராம மக்கள் நிவாரணம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

☞ புளியங்குளம் பகுதியில் பேருந்து தடம் புரண்டதில் நடத்துனர் பலி, 15 பேர் காயம்.

☞ திருமலையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட பிக்குவின் உண்ணாவிரதம் முடிந்தது.

☞ சுனாமி புனரமைப்பு நிதியுதவிகளை வழங்க பொதுக்கட்டமைப்பிற்காக காத்திருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் லிகுன் ஜின் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

☞ சுனாமியால் பாதிக்கப்பட்ட திருமலைமாவட்ட சிங்கள மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கவில்லையெனக் கோரி ஹர்த்தாலில் ஈடுபட்டனர்.

☞ சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் குடாநாட்டில் இலவச கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு.




**25**

☞ சிவனொளிபாதமலை பொலிஸ் சோதனைச் சாவடியில் கைக்குண்டு வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலி.

☞ இஸ்லாமிய அறிஞர் நாடு கடத்தப் பட்டவருக்கு எதிராக அம்பாறையில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**26**

☞ தமிழீழ தொலைக்காட்சி சேவை ஐரோப்பிய நாடுகளில் தனது சேவையை ஆரம்பித்தது.

☞ சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரே கிழக்கில் படுகொலைகளை செய்கின்றனர் என மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரை சந்தித்த வேளை தெரிவிப்பு.

☞ இத்தாவில் பகுதியில் போரியல் வரலாற்று அரும்பொருள் காட்சி மண்டபம் திறப்பு.




☞ கொழும்பு கொம்பனி வீதியில் ஒருவர் சுட்டுக்கொலை.

☞உடுத்துறை மகாவித்தியாலயத்தில் இலவச கணினிப்பயிற்சி நிலையம் திறப்பு.



☞ யாழ்ப்பாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர் கல்வி மாணவர்களுக்கு சுவிஸ் வாழ் தமிழ் சமூகத்தினரின் நிதியுதவியும், துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.



☞ பல்கலைக்கழக நிர்வாகத்தின் முடிவுக்கெதிராக யாழ்.பல்கலை ஊழியர் சங்கத்தினர் சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம் நடத்தினர்.



☞ மட்டு-குடும்பிமலையில் சிறிலங்கா சிறப்புப்படையினர் என சந்தேகிக்கப்படுவோரால் பொதுமக்கள் இருவர் சுட்டுக்கொலை.

☞ செட்டிகுளம் பகுதியில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவர் வெட்டிக்கொலை.

**27**

☞ எம்மைச் சீண்டுவது தொடருமானால் தீர்க்கமான முடிவொன்றை தேசியத் தலைவர் விரைவில் எடுப்பார் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் ஐ.பி.சிக்கு நேயர்களுடனும், மக்களுடனும் கருத்துக்களை பகிர்ந்த வேளை தெரிவிப்பு.

☞ மட்டு-செங்கலடி கணபதிப் பிள்ளை கிராமத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஒருவர் பலி.

☞ புலிகளுடன் இணைந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு உறுதியாக இருப்பதாக சனாதிபதி ரூபவாஹினி தொலைக் காட்சியில் உரையாற்றிய வேளை தெரிவிப்பு.

☞ மட்டு-குடும்பிமலைப் பகுதியில் பொதுமக்கள் இருவர் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவத்திற்கு சிறிலங்கா இராணுவ அணியே காரணம் என மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு.

# பதவி வெற்றிடம்

## பொது நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களில் பணியமர்த்தல் கோரப்படுகின்றது.

*பணிநிலை:–*(அ) நில அளவையாளர் (SURVEYOR)

*தகைமை:–* (01) நில அளவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்

அல்லது

(02) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கை நெறியில் நில அளவை பாடத்தில் சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

03) க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதபாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

04)க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதபாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

05) கணனி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

*பணிநிலை* (ஆ) படவரைஞர் (DRAUGHTSMAN)

*தகைமை:–*(01) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் படவரைஞர் பயிற்சி நெறியைப் பூர்த்தி அடைந்தவர்கள்.

அல்லது

(02) க.பொ.த (உ/த) பரீட்சையில் புவியியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்கள்.

அல்லது

(03) க.பொ.த (சா/த) பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல்

அத்துடன்

(04) AUTO CAD / கணனி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

### மேலதிக விபரம்

(01) *வயதெல்லை:–*30 வயதிற்குட்பட்டவர்கள்

(02) *பயிற்சிக்காலம்:–* 06 மாதங்கள் சம்பளத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்படும்.

03) *சம்பளம்:–*(1) பயிற்சியின் போது-5000/=

(02)தரம் 3 இல் 5860-7560+2700 / 10X170

*குறிப்பு:–*நில அளவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவருக்கு வயதெல்லை தீர்மானிக்கப்படவில்லை சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

*பணிநிலை:–*(இ) அலுவலக உத்தியோகத்தர்

*தகைமை:–*(01) அரச அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் எழுது வினைஞராக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்.

(02) ஆங்கில மொழியினை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கக்கூடிய அனுபவம்

(03) தட்டச்சு, கணனி என்பனவற்றில் உரிய அனுபவம் பெற்றவர்கள்.

*வயதெல்லை:–*55 வயதிற்குட்பட்டவர்கள்.

(வேலைத் தளத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள்)

*சம்பளம்:–*நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:-30.04.2005

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-விளம்பர இல:-5898 ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

*நில அளவை, படவரைஞர், அலுவலக உத்தியோகத்தர், பணிநிலைக்கான பதவி வெற்றிடம்-2005*

**பணிநிலை தெரிவு**

01. 01 ஆம் தெரிவு ☐

02. 02 ஆம் தெரிவு ☐

01.முழுப்பெயர்:-

02.பிறந்த திகதி:-

03.நிரந்தர முகவரி:-

04.தற்காலிக முகவரி:-

05.கல்வித்தகைமை:-

(அ) க.பொ.த (சா/த)

01................................ 05................................

02................................ 06................................

03................................ 07................................

04................................ 08................................

(ஆ) க.பொ.த (உ/த)

01................................ 03................................

02................................ 04................................

(இ).தொழில் நுட்ப கல்வித்தகைமை (நிறுவன பெயருடன்)

(ஈ)கணனி தொடர்பான தகைமை:-

(உ) மேலதிக விபரம்/தகைமை:-

(ஊ) குடும்ப விபரம்/நிலை

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை என உறுதிப்படுத்துகின்றேன்.

* விண்ணப்பதாரியின் ஒப்பம்:

* திகதி:-

(5898)


# சிறிலங்காவில் நான்கு மணிநேரத்திற்கு ஒருவர் வீதி விபத்தில் பலி

சிறிலங்காவில் நான்கு மணித்தியாலங்களுக்கு ஒருவர் வீதி விபத்தில் உயிரிழப்பதாக சிறிலங்கா போக்குவரத்து பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவதானமில்லாமல் வாகனத்தை செலுத்துவதே இதற்கு காரணம் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி பீரிஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவதானமில்லாமல் வாகனத்தைச் செலுத்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடம் 53,458 வீதி விபத்துக்கள் நடந்துள்ளன. இவ் வீதி விபத்துக்களில் 2,116 பேர் உயிரிழந்துள்ளனர்.

# சனாதிபதியின் உத்தரவிற்கமைய மரணதண்டனைகள் நிறைவேற்றப்படும்!

(கொழும்பு)

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான சட்டமா அதிபரின் அறிக்கை நீதியமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதன்படி இனிவரும் காலத்தில் சனாதிபதியின் உத்தரவின்பேரில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை மற்றும் போகம்பரையில் மரண தண்டனைகளை நிறைவேற்றும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய கொலையின் பின்னரே மரண தண்டனை தொடர்பான கருத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'கரேஜஸ்' கொழும்பை வந்தடைந்தது பலம் அதிகரிக்குமென நம்பிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவினால் சிறிலங்காவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கரேஜஸ் என்ற கரையோரப் பாதுகாப்புக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

தற்போது p-621 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கப்பலின் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பலை சிறிலங்கா கடற்படைக்குக் கையளிக்கும் வைபவம் சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜப்ரிலான்ஸ்ரற், சிறிலங்கா கூட்டுப்படைத் தளபதியும், கடற்படைத்தளபதியுமான தயாசந்தகிரி ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்திலிருந்து இந்தக் கப்பல் சிறிலங்காவை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது.

இந்தக் கப்பல் சிறிலங்கா கடற்படைக்குக் கிடைத்தன் மூலம் கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்குமென கூட்டுப்படைகளின் தளபதி தயாசந்தகிரி தெரிவித்தார்.

# மலையகத்தில் பதிவற்றோரை வெளியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

மலையகத்தின் தோட்டப்புறங்களில் பதிவில்லாதோரை வெளியேற்றும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பெருந்தோட்ட அமைச்சு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சட்டத்தின் கீழ் இவ்வாறு தோட்டங்களில் பதிவில்லாதவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த நான்கு பேரை வெளியேறுமாறு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 - 07 - 1915



உதிர்வு 02 - 03 - 2005

## அமரர் காளியம்மா சின்னையா

**அன்பாய் பாசமாய் பண்பாய் வாழ்ந்து மறைந்திட்டீர்!**

**ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (30.03.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தகவல்:-
பிள்ளைகள். மருமகன்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

49 பகுதி II
விசுவமடு

(5899)

# குஜராத்தில் ஆளும் பா.ஜ.கட்சியினுள் உட்பூசல்

# அதிருப்தியாளர்களை பேச்சுக்கு அழைக்கிறார் அத்வானி!

(அகமதாபாத்)

குஜராத்தின் முதல்வர் நரேந்திர மோடிக்கு எதிராக சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்கள். இதனால் மோடியின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அதிருப்தியாளர்களின் குழுவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மூவருக்கு அத்வானி அவசரமாக அழைப்புவிடுத்துள்ளார்.

குஜராத்தில் முதல்வர் நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. இங்கு மோடி சர்வாதிகாரியாகச் செயற்பட்டு வருகிறார் பா.ஜ.க.சட்டமன்ற உறுப்பினர்களையும் மற்றும் கட்சியின் பிரமுகர்களையும் மதித்து நடப்பதில்லையெனவும் அவர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரே இக்குற்றச் சாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இக்குற்றச்சாட்டை முன்வைத்த இவ்வதிருப்தியாளர்கள் குழு மோடியை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் எனவும் பா.ஜ.க.உயர் பீடத்திடம் கேட்டுள்ளனர்.

இதன்காரணமாக அதிருப்தியாளர்களில் முக்கிய தலைவர்களான முன்னாள் முதல்வர் கேசுபாய்பட்டேல், கன்சிராம் ராணா, சுரேஸ் மேத்தா ஆகிய மூவரையும் நாளை புதுடில்லிக்கு வருமாறு பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி அவசர அழைப்பு விடுத் துள்ளார். டில்லியிலே நடைபெறும் கூட்டத்தில் கட்சியுள் உட்பூசல்கள் தொடர்பான விசாரணைகள் நடை பெறும் அதிருப்தியாளர்கள் மோடியை மாற்ற வேண்டும் என்று பிடிவாதமாக உள்ளதனால் ஆட்சி கவிழும் அபாயமும் இருக்கிறது.அத்துடன்பா.ஜ.க. தலைவர் அத்வானி மோடியின் நெருங்கிய ஆதரவாளர் எனத் தெரிவிக்கப்படுவதால் இதன் தீர்ப்புக் குறித்து பல்வேறு அபிப்பிராயங்களும் கட்சி வட்டாரங்களில் நிலவுகின்றன.



நேற்று முன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட திடீர் சுனாமி அலை எச்சரிக்கையினால் சென்னையின் சாந்தோம் ஆலயத்தின் பின்புறத்தில் இருந்த மக்கள் பயப்பீதியுடன் வீடுகளை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் வீதியில் நடந்து செல்லுகிறார்கள்.

# சுனாமி எச்சரிக்கையையடுத்து இந்திய முப்படைகளும் தயார் நிலைஉத்தரவு!

(புதுடில்லி)

சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்தியக் கடற்கரை எங்கும் முற்படைகள் தயார்படுத்தப் பட்டன.

சுமாத்திரா தீவில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து 'சுனாமி' எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் நேற்று முன்தினம் நள்ளிரவில் இதுபற்றி நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். சுனாமி எச்சரிக்கைபற்றி தமிழ்நாடு, ஆந்திரா, புதுச்சேரி, கேரளா மற்றும் மேற்கு வங்காள முதலமைச்சர்களை உடனடியாகத் தொடர்புகொண்டு கேட்கப்பட்டது.

ராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் தயார் நிலையில் இருக்கும்படி உத்தர விடப்பட்டது. கடலோர மாநிலங்களில் துணை இராணுவப்படையினர் மற்றும் மத்திய பொலிசார் மாநில அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும்படியும் கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

# கார் உற்பத்தியில் தமிழகம் ஆசியாவிலேயே முதலிடம்!

கார் உற்பத்தியில் ஆசியாவிலே தமிழ்நாடு முன்னணி இடம் வகிக்கின்றது. இவ்வாறு இந்தியத் தொழிலாளர்களின் உட்கட்டமைப்பு விடுத்துள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலே உற்பத்தி செய்யப்படும் கார்உற்பத்தியில் 35 தொடக்கம் 40 வீதம் வரையான உற்பத்தியை தமிழ் நாடு மேற்கொள்கிறது.

தற்போது கார் உற்பத்தி தொழிற்சாலைகளில் ஆசியாவில் உள்ள முக்கிய மூன்று தொழிற்சாலைகளில் தமிழகத்தின் சிறிபெரும்புதூர் கூண்டாய் கார் தொழிற்சாலையும் ஒன்றாகும். இதேவேளை இந்தியாவிலேயே தொழிற தகராறுகள் மிகக்குறைந்த மாநிலமாக தமிழகம் தான் உள்ளது. திறமையான மனிதவலு மற்றும் சிறந்த தொழிற்நுட்பவியலாளர்கள் என்பனவும் இங்கே இருப்பதாக தொழிலதிபர்களின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

# பொலிசாருக்கு தொப்பை வயிறு இல்லாவிடில் மாதம் 500 ரூபா மேலதிகப்படி!

## -மகாராஷ்டிர அரசு அறிவிப்பு

(மும்பாய்)

மகாராஷ்டிராவில் தொப்பை (வயிறு பெருக்கம்) இல்லாத பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 500 ஐ வழங்குவதாக அம் மாநிலஅரசு திடீர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது. மகாராஷ்டிராவில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களைத் தடுக்க பொலிசாரால் முடியவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் பொலிசாருக்கு பொருத்தமான உடல்வலு இல்லாமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இது பற்றிப் பொலிஸ்துறை ஆராய்ந்தது மருத்துவ நிபுணர்களைக் கொண்டு பொலிசாருக்கு சமீபத்தில், பரிசோதனைகளை நடத்தியது. அதில் 35 வயதிற்கு மேற்பட்ட பொலிசாருக்கு உடல் பருமன் பிரச்சினைதான் அதிகம் இருப்பது தெரிந்தது. அத்துடன் தொப்பை விசயத்தில் பல பொலிசாருக்குப் பாதிப்பு உள்ளது என்றும் கண்டறியப்பட்டது. பெரும்பாலானோர் மதுப்பழக்கத்துக்கு ஆளாகி இருப்பதால், நோய்க்கு உட்பட்டு இருப்பதும் தெரியவந்தது.

பொலிசாரின் ஆரோக்கியத்திற்காக பல திட்டங்களைச் செயற்படுத்தியும் எந்தப் பலனும் இல்லை. இதனால் புதிதாக ஊக்கத்தொகைத் திட்டத்தை இப்போது' அரசு அறிவித்துள்ளது. 35 வயதிற்கு மேற்பட்ட பொலிசார் உடல் நலத்துடன் இருந்தால் அவர்களுக்கு மாதாமாதம் 500 ரூபாய் ஊக்கத்தொகை வழங்குவதாக முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான பயிற்சிகளில் பொலிசார் ஆயத்தமாகி வருகிறார்கள்.

# வைத்தியநாதன், ஷாருக்கான், அனில்கும்ளே ஆகியோருக்குப் பத்மஸ்ரீ விருது !

(புதுடில்லி)

குன்னக்குடி வைத்தியநாதன், நடிகர் ஷாருக்கான், அனில்கும்ளே உட்பட 52 பேருக்கு சனாதிபதி அப்துல்கலாம் 'பத்மஸ்ரீ' விருது வழங்கினார்.

மத்தியரசு சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண விருதுகள் வழங்கப் பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் குடியரசுதின விழாவின் போது இந்த விருது பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் அறிவிக்கப்படும். மிகஉயரிய விருதான 'பாரத ரத்னா' வுக்கு இந்த ஆண்டு எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

மறைந்த முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். தீட்சித், பிரபல கார்ட்டூன் கலைஞர் ஆர்.கே. லட்சுமணன், அட்டானி ஜெனரல் மிலன்குமார் பானர்ஜி, மூத்த அரசியல் தலைவர் கரண்சிங் ஆகியோர் பத்மவிபூஷண் விருதும், ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற துப்பாக்கிசுடும் வீரர் ராஜியவர்த்தன் சிங் ரத்தோர், கிரிக்கெட் வீரர் அனில் கும்ளே, நடிகர் ஷாருக்கான் ஆகியோர் பத்மஸ்ரீ விருதும் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பயணியர் புதிய பேருந்துப் பணி

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள். பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக. 1.04.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**கிளிநொச்சி–புளியங்குளம்**

நேர ஒழுங்கு

| கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 09.00 | 09.20-09.40 | 10.15 | 11.00 |

**புளியங்குளம்–கிளிநொச்சி**

நேர ஒழுங்கு

| புளியங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| மாலை 03.00 | 03.45 | 04.20-4.40 | 05.00 |

*முகாமையாளர்,*
*பேருந்துப்பகுதி,*
*கிளிநொச்சி.*

(சி.11612)


26.12.2004 அன்று ஆழிப்பேரலையின் சீற்றத்தால் எமை விட்டுப்பிரிந்தவர்களின்.....

# 95 ஆம் நாள் நீங்காத நினைவாக



ஜெ. மரியசரோஜினி
மலர்வு: 14.04.1979



ஜெ. பானுஷன்
மலர்வு: 24.08.1999



இ. மகேஸ்வரி
மலர்வு: 05.10.1940

அன்பின் அழியாத நட்சத்திரங்களே!
உங்களோடு வாழ்ந்த அந்தப்பசுமையான நாட்களை மறப்போமா?
நாட்கள் நகர்ந்தாலும் நம் நினைவுகள் அழியாது. ஆர்ப்பரித்த அலை
ஆழ்கடலில் எழுந்து ஈழக்கரை வந்ததேன்? உங்களை அழைத்துச்செல்லவா?

தகவல்
பா.ஜெயபாலசிங்கம் (பாசன்)

உடுத்துறை வடக்கு (5897)




வெற்றிக்கிண்ணத்துடன் அவுஸ். அணியை முதலாவது படத்திலும், தொடரின் சிறப்பு ஆட்டக்காரர் கில்கிறிஸ்ட். போட்டியின் நாயகன் பொண்டிங் ஆகியோரை வெற்றிக்கிண்ணங்களுடன் இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஒக்லண்ட் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அவுஸ்.க்கு ஒன்பது விக்கெட் வெற்றி



நியூசிலாந்தின் ஒக்லண்டில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்தை ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை இரண்டுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் கைப்பற்றிவிட்டது.

இன்று ஒரு நாள் மீதமிருக்கும் போதே போட்டி முடிவுக்கு வந்துள்ளது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் முதலாம் நாளில் 69.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. ஹார்மங் மார்ஷல், பிளமிங் ஆகியோர் முறையே 76,65 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 383 ஓட்டங்களைப் பெற்று 91 ஓட்டங்கள் முன்னிலையிலிருந்தது. பின்னர் நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் 254 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆஸ்லேயும், வெட்டோரியும் அரைச்சதம், (69,65) பெற்றனர். இதில் மெக்ராத்தும் ஷேன்வோர்னும் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன்படி 164 என்ற வெற்றியிலக்கோடு நான்காம் நாளான நேற்று களமிறங்கிய அவுஸ்திரேலியா ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 166 ஓட்டங்களைப்பெற்று ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் பொண்டிங் 82, லாங்கர் 59 ஓட்டங்களை முறையே ஆட்டமிழக்காது பெற்றனர்.

இந்த இன்னிங்சில் நான்கு விக்கெட்டுக்களைப் பெற்ற கிளன் மெக்ராத் 499 விக்கட்டுக்களை வீழ்த்தியவராகிறார்.

# மேற்கிந்திய முன்னணி வீரர்களை அணியில் இணைக்க இறுதி முயற்சி



நாளை மேற்கிந்தியத்தீவுகளின் கயானாவில் ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பிரச்சினைக்குள்ளாகியுள்ள மேற்கிந்தியத்தீவு வீரர்களைப் பங்கேற்கச் செய்யும் இறுதி முயற்சியில் கிரிக்கெட் வீரர்களின் சங்கம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரையன் லாரா உட்பட ஏனைய சில வீரர்கள் தமது நிரந்தர அனுசரணையாளரான டிஜிசல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கேபிள் அன் வயலஸ் நிறுவனத்துடனும் ஒப்பந்தம் செய்திருப்பதாக வெளிவந்த செய்தியோடு கிரிக்கெட்டில் சர்ச்சை தோன்றியது தெரிந்ததே. எனினும் வீரர்களுக்குத் தடை விதித்திருப்பது ஒப்பந்தங்களை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் இவர்கள் 2004ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுடன் வி.பி. கிண்ணத்துக்காக ஆடியதையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்தப் புதிய ஒப்பந்தத்தில் வித்தியாசமாக ஒன்றும் காணப்படவில்லை என்றும் தடையை மீள் பரிசீலனை செய்யுமாறு கிரிக்கெட் சபையிடம் வலியுறுத்தியுள்ளது.




இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிந்ததால் இரு அணித்தலைவர்களும் வெற்றிக்கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

# மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

தென்னாபிரிக்காவில் நடைபெறும் மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய மகளிர் அணி இங்கிலாந்து மகளிர் அணியை ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப இணையான சார்லட் எட்வட்டும் அரென் பிரண்ட்லும் சிறப்பாக ஆடிய போதும்அவர்களுக்குப்பின் வந்த எந்த வீராங்கனையும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை. பதிலுக்கு 141 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்திய அணியின் விக்கெட் கீப்பர் அஞ்சு சோயாதார் ஆகியோரின் சிறப்பாட்டத்தால் மூன்று விக் கெட்டுக்களை மட்டுமிழந்து 141 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. துடுப்பாட் டத்தில் அஞ்சும் சோப்ரா64, ஆர்தார்42 ஓட்டங் களை முறையே ஆட்டமிழக்காது பெற்றனர்.



# பெங்களூரில்பெற்ற டெஸ்ட் வெற்றியால் பாக்.கின் எதிர்காலம் பிரகாசித்துள்ளது

—பொப் வூல்மர்




நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்று முடிந்த இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியை 168 ஓட்டங்களால் தமது அணி வெற்றி பெற்றதன் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் எதிர்காலம் பிரகாசித்திருப்பதாக பயிற்றுநர் பொப் வூல்மர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தான் பயிற்சி வழங்கிய எட்டாவது டெஸ்ட் தொடர் எனக் குறிப்பிட்ட வூல்மர் பெரும் நம்பிக்கையுடன் இதில் பங்குபற்றியதாகக் கூறினார். மொகாலியில் நடைபெற்ற போட்டியைத் தோல்வியிலிருந்து கடினமாகப் பாதுகாத்தபோதும கொல்கத்தா போட்டியில் வென்றிருக்கலாம். இந்தியா போன்ற நாடுகளுடன் ஆடுவது பெரும் விடாமுயற்சியாகும். ஒன்றிலிருந்து பதினொரு வீரர்களும் சிறப்பாகப் பங்கு வகித்தனர் எனக் கூறியுள்ள அவர் முன்னதாக பயிற்சிப் போட்டிகளின்போது பலமற்ற. பாகிஸ்தான் அணியுடன் ஆடுவதாகத் தெரிவிக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்தினார்.

இத்தொடரில் தான் இன்சமாம் உல்-ஹக், யுனிஸ்கான் ஆகியோரைப் பாராட்டுவதாகத் தெரிவித்தார். இந்த வெற்றியை பிரதமர் பர்வேஸ் முஷராப்பும் பாராட்டியுள்ளார்.

# யாழ். மாவட்ட கால்பந்தூப் போட்டி; லக்கிஸ்ரார், ஞானமுருகன் அணிகள் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் அனுசரணையுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தின ஆட்டங்களில் கிளிநொச்சி வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியும் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் வெற்றிபெற்றுள்ளன.

கிளிநொச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த சில்வஸ்ரார் விளையாட்டுக்கழத்திற்கும் இடையே இடம்பெற்ற ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்து இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தின்போது லக்கிஸ்ரார் அணி இரண்டுகோல்களையும் சில் வெஸ்ரார் அணி ஒருகோலையும் பெற்றதைத்தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் கோல்கள் எவையும் பெறப்படாதநிலையில் இரண்டுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞான முருகன் விளையாட்டுக்கழக மும் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டதில் ஞான முருகன் விளையாட்டுக்கழகம் 9-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (41)

## கரைச்சிப் பிரதேச மென்பந்து போட்டி

கரைச்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான ஆறுபேர் கொண்ட மென்பந்துத்துடுப்பாட்டப் போட்டி இன்றும், நாளையும் கிளி, கனகபுரம் மைதானத்தில் நடைபெறுமென கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவனேசன் தெரிவித்துள்ளார்.

எனவே போட்டியில் கலந்து கொள்ளும் கழக அணிகள் தமது வரவினை முன்கூட்டியே உறுதி செய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.



# விளையாட்டு

## பாதுகாப்பு ஆட்டமே தோல்விக்குக் காரணம்

-கங்குலி

மதிய உணவு இடைவேளை வரை ஒரு விக்கெட் தான் விழுந்தது. அதற்குப் பிறகு வீரர்கள் அதிகமான பாதுகாப்பு ஆட்டத்தில் ஈடுபட்டனர். இது தோல்விக்குக் காரணமாக அமைந்தது. இந்தத் தோல்வி எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. தொடரைக் கைப்பற்ற வேண்டியது. சமமானது வருத்தமே. இவ்வாறு கங்குலி கூறினார்.

வெற்றி குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் கூறும் போது இது சிறந்த வெற்றி. யுனுஸ் கான் ,கனேரியா அப்ரிடி, முகமது சமி ஆகியோர் வெற்றிக்குக் காரணமாக இருந்தனர் என்றார்.

# இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப் படை மாவீரர் நினைவாக இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு: யாழ். லீக்கைச்சேர்ந்த சென்மைக்கல் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும்,பருத்தித்துறை லீக்கைச்சேர்ந்த றெஞ்சல்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து யாழ். லீக்கைச்சேர்ந்த பாடும்மீன் விளையாட்டுக்கழகமும். விளையாடவுள்ளன. (41)



முல்லைத்தீவு வலய பள்ளிகளுக்கிடையேயான 15 வயது ஆண்கள் பிரிவுக்கான கரப்பந்தாட்டப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது.

இதில் இறுதியாட்டத்துக்குத் தெரிவான முள்ளியவளை கலைமகள் வித்தியாலய அணிக்கும் புதுக்குடியிருப்பு சிறி.சுப்பிரமணிய வித்தியாசாலை அணிக்குமிடையே இடம்பெற்ற போட்டியில் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை அணி வெற்றிபெற்றுக்கொண்டது. போட்டியில் பங்கு கொண்ட இருஅணிகளையும் படத்தில் பார்க்கலாம்.

(படப்பிடிப்பு:- க.தவரட்ணம்)



சிந்தனைக்கு

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## புலிகளைச் சீண்டுதல்!

அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அவர்கள் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு படுகாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.இவருடன் சென்ற வேறு போராளிகளும் பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. இந்நாடகத்தை ஆரம்பிப்பதற்காகத் திட்டமிட்டபடி மண்டானா அகதிகள் முகாமில் வைத்து விசேட அதிரடிப்படையினர் போராளி ஒருவரைக் கைது செய்ததோடு, தாக்குதலும் நடத்தினர்

போராளி கைது செய்யப்பட்டமையும்–தாக்கப்பட்டமையும் குயிலின்பனை அதிரடிப்படையினர் திட்டமிட்ட ரீதியில் அப்பகுதிக்கு வரவழைக்க மேற்கொண்ட நடவடிக்கையே ஆகும். அதாவது வரவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். ஏனெனில், போராளியைக் கைது செய்யக் காரணம் எதுவுமில்லை.

அது மட்டுமன்றி குயிலின்பன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது திட்டமிட்ட செயல் என்பதற்கு தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் கட்டைகள், பொல்லுகள் என்பன தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமையும், மேலதிக பொலிசார் அங்கு குவிக்கப்பட்டிருந்தமையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படத்தக்கவையாகும்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மறைமுக யுத்தத்தில் தீவிரம் காட்டி வந்த சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினர் தற்பொழுது குயிலின்பன் உட்படப் போராளிகள் மீது பகிரங்கமாகத்தாக்குதல் நடத்த முன்வந்துள்ளமையானது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு விடுதலைப்புலிகள் இயக்கத்தை வலுக்கட்டயமாக நேரடி மோதலில் ஈடுபடுவதற்குத் தூண்டுவதற்காகவே அர்த்தம் கொள்ளத்தக்கது.

இதே சமயம் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் மீது தாக்குதலை நடத்துவதன் மூலம் அவர்களின் அரசியல் பணிகளுக்கும் ஆயுதப்படைத்தரப்பு குந்தகம் விளைவிக்க முற்படுவதாகவே கொள்ளமுடியும்.அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டு சரத்துக்களை முறித்துக் கொள்ள ஆயுதப்படையினர் தயாராகி விட்டதாகவே இதன் அர்த்தம் உள்ளது.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினர் குயிலின்பன் மீது இத்தகைய மிருகத்தனமாகத் தாக்குதலை மேற்கொள்வதற்கு மேற்கூறப்பட்டவாறு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு எதிரான தமது செயற்பாட்டை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, இத்தாக்குதலை குயிலின்பன் மீதே மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற குறிக்கோளும் இருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

ஒரு புறத்ததில் குயிலின்பன் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் என்ற நிலையில் அவர் மீதான தாக்குதலானது அரசியல் முக்கியத்துவம் பெற்றதாகிறது. அதாவது விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் மீதான தாக்குதலாக இது கொள்ளப்படும். இதனால் அரசியல் ரீதியில் முதன்மைப்பட்டதாகிறது.

இரண்டாவதாக குயிலின்பனின் நடவடிக்கை குறித்த குரோதமும் காரணமாக இருக்கவும் வாய்ப்புண்டு. ஏனெனில் குயிலின்பன் தாக்கப்பட்டதற்கு இருதினங்களுக்கு முன்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் வில்லாயாபுடனான சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவினர் எனக் கூறிக்கொண்டு சிறிலங்கா இராணுவப்புலானாய்வுத்துறையினரே படுகொலைகளைச் செய்வதாகக் குயிலின்பன் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த வகையில் குயிலின்பன் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது திட்டமிட்ட ரீதியில் –யுத்த நிறுத்த விதிமுறைகளுக்கு மாறாகவும் யுத்த நிறுத்த உடன்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கொள்ளப்படுவதில் தவறு எதுவுமில்லை. அத்தோடு இத்தாக்குதலானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் பாதுகாப்பாக அரசியல் பணிகளை மேற்கொள்வதையும் சவாலாக்கியுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தமது பொறுமைக்கும் எல்லையுண்டு; புலிகளைச் சீண்டிப்பார்க்க வேண்டாம் எனப் பல தடவை எச்சரித்த போதும் இதற்கு அரசாங்கத் தரப்பில் இருந்து சாதகமான பதிலில்லை மாறாக ஆயுதப்படைத்தரப்பின் இத்தகைய நடவடிக்கைகளே வெளிப்படுத்துவதாகவுள்ளது. இது யுத்தம் ஒன்றைச் செய்ய அரசாங்கம் தயாராகி விட்டது என்பதையே உணர்த்துவதுபோல் உள்ளது.

# சிறிலங்காவின் வானிலை மையத்தில் ஒரேயொரு தொலைபேசிமட்டுமே

### -சுனாமி குறித்த தகவல் பெறமுடியாத நிலை

(கொழும்பு)

சுனாமி குறித்து தகவல்களை வழங்கக்கூடிய சிறிலங்காவின் வானிலை ஆய்வுமையத்தில் ஒரேயொரு தொலைபேசி மட்டுமே உள்ளது. இதனால் இம்மையத்தைத் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியவில்லை என ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சுனாமி குறித்த எச்சரிக்கைத் தகவல்கள் சரிவர வெளியிடப்படவில்லை என்பது குறித்து நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் நடைபெற்ற மக்கள் பங்கேற்பு கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதில், நேற்றுமுன்தினம் இரவு முதலில் வெளியான ஆழிப் பேரலை எச்சரிக்கைத் தகவல் மட்டுமே அரசதரப்பில் வெளியானது. அதன் பின்னர் அரச தரப்பில் எந்தத் துறையை இந்தப் பேரிடர் நிகழ்வு தொடர்பாக அணுகுவது என்ற குழப்பம் ஊடகவியலாளர்கள் மத்தியில் நிலவியது என்று பலரும் குற்றம் சாட்டினர்.

இது குறித்துத் கருத்துதெரிவித்த ஊடகவியலாளர் நியூட்டன் குணரட்ன, முதலில் கிடைத்த எச்சரிகைத் தகவலோடு சரி.ஆழிப் பேரலை தாக்கியதா? எப்போது தாக்கும்? என்பது குறித்த தகவலைப் அரச தரப்பிடமிருந்துபெற முயன்றபோது அவர்கள் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தனர் என்றார்.

மற்றொரு ஊடகவியலாளர் கூறுகையில், சிறிலங்காவின் வானிலை ஆய்வு மையத்தில் ஒரே ஒரு தொலைபேசிதான் உள்ளது.

திங்கட்கிழமை இரவு அந்தத் தொலை பேசியில் உரிய அலுவலர்களைத் தொடர்பு கொள்வது என்பது நடக்காத நிகழ்வாகிவிட்டது என்றார்.

அதேபோல் சிறிலங்காவின் தொலைபேசித் தொடர்புகள் குறித்தும் கடும் விசனத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வெளிப்படுத்தினர்.

நேற்றுமுன்தினம் இரவு செல்லிடப்பேசி மற்றும் தொலைபேசிப் பயன்பாடு அதிகமாக இருந்த தால் தொடர்புகளைப் பெறுவதில் கடும் சிரமம் இருந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வசதிகளை சிறிலங்கா தொலைபேசி தொடர்புத் துறை பெற்றிருக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

பேரிடர் நிகழ்வு போன்றவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை ஒரேயொரு துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்றே இதில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

# திஸாநாயக்கவின் மனுவை நிராகரிக்க சட்டமாக அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

எஸ்.பி.திஸாநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நிராகரிக்க வேண்டுமென சட்டமா அதிபர் கோரியுள்ளார்

உயர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு இரண்டு வருட கடுழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர் தாக்கல் செய்த மனுவின் விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்றபோது சட்டமா அதிபர் விளக்கம் அளித்தார். இதன்போது உயர் நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என சட்டமா அதிபர் தெரிவித்தார். இந்த நிலையில் வழக்கு எதிர்வரும் மே 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (32)

# மின்சாரசபைப் பிரதிநிதிகள் பிரதமர் ராஜபக்ஷ சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. மின்சார சபையினை மறுசீரமைப்பதாகக் கூறப்படும் விடயம் தொடர்பிலேயே சந்திப்பு இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மின்சார சபை மறுசீரமைத்தல் தொடர்பில் அரசாங்கம் முடிவொன்றை எடுக்க வேண்டும். இல்லையேல் .இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடனுதவி வழங்கபடமாட்டாது எனச் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி தெரித்துள்ளது. இந்த நிலையிலேயே அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுப்பதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (32)

# ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு ஜெயந்த தனபால போட்டி

### - உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

2006 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தேர்தலில் சிறிலங்கா அரசு சார்பில் ஜயந்த தனபால போட்டியிடுகிறார்.

இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை சிறிலங்கா அரசு நேற்று வெளியிட்டது. ஜயந்த தனபாலவுக்கு ஆதரவு திரட்டுமாறு தனது தூதரகங்களுக்கு சிறிலங்கா அரசு தகவல் அனுப்பியுள்ளது. 2006 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு தற்போதே ஆதரவு திரட்டுவது என்பது மிகவும் முந்தைய காலமாக இருந்தாலும் அப்பணிகளை உடனே தொடங்க சிறிலங்கா அரசு அறிவுறுத்தியுள்ளது. ஐ.நா. சபையில் பொறுப்பு வகித்த ஜயந்த தனபாலவின் பெயரை பாராளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்தார். தற்போதைய ஐ.நா. செயலர் நாயகம் கொபிஅனானின் பதவிக் காலம் 2006 ஆம் ஆண்டு இறுதியில் முடிவடைகிறது.

### செங்கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கும்

# இலங்கையர் குறித்து விசாரணை நடத்த சிறிலங்கா பொலிஸ் குழு செல்கிறது

செங்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கையர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக சிறிலங்காவின் பொலிஸ் குழு எகிப்து செல்கிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவியுடன் இக்குழு அங்கு செல்கிறது. அத்துடன் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அழைத்துச்செல்லும் நால்வர் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோதக் குடியேற்றங்களை தடுக்கும் பிரிவின் பணிப்பாளர் சமரதுங்க தெரிவித்தார். வென்னப்புவப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் எகிப்தில் வேலை பெற்றுத்தருவதாக இவர்களை அழைத்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற படகு செங்கடல் பகுதியில் பழுதடைந்ததால் அவர்கள் தத்தளிததனர். அனைவரையும் எகிப்தியர்கள் காப்பாற்றியுள்ளனர். செங்கடல் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட 137 இலங்கையர்களில் அதிகமானவர்கள் நீர் கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. உறவினர்கள் மூலம் இவர்களுக்கான விமானக் கட்டணங்கள் அறவிடப்பட்டு அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தகவல் முன்னரே கிடைத்ததால் பதற்றமின்றி செயற்பட முடிந்தது

## -சுனாமி எச்சரிக்கை குறித்து மா.ரங்கன்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியின் தாக்கம் பற்றி முன்கூட்டியே அறிந்து கொண்டமையினால் எந்த விதமான பதற்றமுமின்றி இலகுவான முறையில் பாதுகாப்பான இடத்திற்குப் பொது மக்களை நகர்த்தி மீண்டும் இடைத்தங்கல் முகாம்களில் நேற்று அதிகாலையிலேயே மக்களைத் தங்கவைக்க முடிந்தது என்று முல்லைத்தீவுமாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்மா.ரங்கன் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்: ஆழிப்பேரலை முல்லைத்தீவை தாக்கிப் பெரும் சேதங்களை ஏற்படுத்திய பின் மீண்டும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையிலேயே சுமாத்திராதீவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் சுனாமி பேரலை ஏற்படலாம் என ஊடகங்கள் மூலம் அறிந்தவுடன் மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்த வேண்டிய கடப்பாடு இருந்தது.

இந்த நடவடிக்கையினை நாங்கள் ஒவ்வொரு இடைத்தங்கல் முகாம்களிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் மூலமாகத் தெரியப்படுத்தி மக்களை இரவோடிரவாக பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்தினோம். இதில் காவல்துறையினரும், செயலணிக்குழுவினரும் எம்முடன் ஈடுபட்டு மக்களை நகர்த்துவதில் பெரும் உதவிபுரிந்தனர்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில் மக்கள் முன்கூட்டியே சுனாமியின் தாக்கம் ஏற்படப் போகின்றது என்பதை அறிந்திருந்தமையினால் இலகுவான முறையில் அவர்களை நகர்த்தி மீண்டும் காலையில் மீளவும் அப்பகுதிகளுக்கு கொண்டுவரமுடிந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# வெலிமடையில் இனந்தெரியாத நோய்க்கு இரு மாணவர்கள், உப அதிபர் பலி

வெலிமடையில் இனந்தெரியாத நோய்க்கு இலக்காகி ஒரே பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் மற்றும் உப அதிபர் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

வெலிமடை ஊவா பரணகமவிலுள்ள பாடசாலையொன்றில் பத்தாம் வகுப்பில் கல்விப் பயிலும் மாணவன் ஒருவர் கடந்த ஞாயிறன்று மயங்கி விழுந்ததனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டசிறிது நேரத்தில் அம் மாணவன் மரணமடைந்துள்ளார் இதே பாடசாலையின் மற்றுமொரு மாணவனும் உப அதிபரும் நேற்று முன்தினம் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை அவ் இருவரும் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களின் மரணம் குறித்து பரிசோதனை நடத்திய வைத்தியர்கள் இவர்களின் கல்லீரலை நோய் கிருமிகள் தாக்கியிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். எனினும் இம்மரணங்கள் குறித்து பூரண ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் இரு விசேட குழுக்கள் ஊவா பரணகமவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் செல்டன் சந்ரசிறி தெரிவித்துள்ளார். குடிநீர் மூலமாகவே இந்நோய் பரவுவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## -அம்பாறை கவடாப்பிட்டியில் -

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு.க.தொழில் உபகரணங்கள் வழங்கல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களை மீண்டும் நாட்டின் உற்பத்தியில் பங்கெடுக்க வைப்




பதற்காகவும், மீண்டும் அவர்களை சொந்தக்காலில் நிற்க வைப்பதற்காகவும், செயற்றிட்டங்களை அம்பாறை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.

அகதிகளுக்கான தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்து அவர்களை தங்க வைத்ததன் பிற்பாடு அவர்களுக்குத் தொழில்வாய்ப்புகள் என்பது அவசியம். அந்த வகையில் கடந்த 26ஆம்திகதி சுனாமி அனர்த்த மூன்றாம் மாத நினைவை முன்னிட்டு மாலை 5:00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக தற்காலிக மீள் குடியேற்ற மாதிரிக்கிராமமான கவடாப்பிட்டியில் SMYRNA / FELLOWSHIP நிறுவன அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீன்பிடி உபகரணங்களையும், தையல் இயந்திரங்களையும் வழங் கியதுடன் ஒரு தொகை மேசை கதிரைகளையும், விளையாட்டு உப கரணங்களையும் அன்பளிப்புச் செய்தது.

# புதுக்குடியிருப்பில் வீதிவிபத்தில் நால்வர் படுகாயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு முல்லை வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பகல் முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பை நோக்கி இரண்டு உந்துருளிகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் வேகமாக ஓடி வந்தன.

இதேவேளை புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலயம்முன்பாக முன்னுக்கு வந்த உந்துருளி திடீரென வலப்பக்கமாகத் திரும்பியபோது பின்னல்வேகமாக வந்த உந்துருளி மோதிக் கொண்டது இதில் நால்வர் காயமடைந்தனர். (08)

### கண்காணிப்புக்..

பனைச் சந்தித்த போது குயிலின்பனின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்துள்ளார்.

இச் சம்பவம் நடைபெற்ற அகதி முகாமில் உள்ள விசேட அதிரடிப் படையின் காவலரண் சேதமாக்கப் பட்ட சம்பவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லையென குயிலின்பன் கூறியுள்ளார்.

### லெப்டினன்ட்...

வில் இம் மாவீரரதுவித்துடல் அவரது இல்லத்திலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டு வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவீரரின் தந்தையார் அருள்ராசா பொதுச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுச் சுடரினை கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி சிவஞானசுந்தரம், அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் பாலசுப்பிரமணியம், சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, கோப்பாய் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் செம்பருதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நினைவுரையினை யாழ். மாவட்டதேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன்சூசிறில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் கலைவிழி, கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருதி ஆகியோர் ஆற்றினர். பின்னர் மாவீரரது வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனியாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் மாலை 6.30 மணியளவில் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பொதுமக்களும், போராளிகளும் கலந்து கொண்டனர்.

### வவு...

தி.ஞானவேல் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமது அரசியல்துறைப்பணிமனை மீது இரண்டாவது முறையாகவும் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக கடுமையான ஆட்சேபனையினைத் தெரிவித்ததோடு இது தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக மேலும் அவர் தெரிவித்தார்.

இதைத் தவிர மாவட்ட மக்களின் நிலமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததுடன் மக்களுக்கு இராணுவத்தினாலும், பொலிசாராலும் ஏற்படுகின்ற இடையூறுகள் தொடர்பாகவும் அவற்றினை நிவர்த்திசெய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அரசியல்துறையின் அனுமதியுடன் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பணிமனையின் பின் பகுதியைச் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் சென்று பார்வையிட்டனர். பணிமனையினைப பார்வையிட அனுமதித்த போதும் அனுமதியை மீறிய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பணிமனையின் பின் பகுதியைப் படம் பிடித்து சென்றிருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

இதேவேளை அரசியல்துறைப் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாகத்தாம் விசாரணைகளினை ஆரம்பித்திருப்பதாகவும், இனி இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெறாமல் இருப்பதற்கு தாம் ஆவன செய்வதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (21)

### அவசர.....

திலேயே அவசரகால நிலமையின்போது தகவல்களை விரைவாகப் பொதுமக்களுக்கு வழங்க முடியும், பல்வேறுபட்ட ஊடகங்கள், பல்வேறுபட்ட ரீதியில் அறிவிப்புகளை வழங்கும்போது அதனால் மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனால் இவ்வாறான ஒருவரை நியமிப்பதன் மூலம் ஒரே விதமான தகவலை நாட்டுமக்கள் அனைவருக்கும் வழங்க முடியும் என இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

# காணவில்லை



உடையார்கட்டு இருட்டுமடுவைச் சேர்ந்த ஜெசிங்கம் என்பவரது மகள் கயல்விழி கடந்த 21.03.2005 திங்கட்கிழமை காலை பாடசாலைக்குச் சென்றவர் வீடு திரும்ப வில்லை. இவர் சிவப்பு நிறப்பாவடை, சட்டை, நீலத் தொப்பி அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு தகவல் தரவும். தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஈழநாதம் பணிமனை,
புதுக்குடியிருப்பு.
அல்லது காவல் பணிமனை .
புதுக்குடியிருப்பு.

## கயல்விழி

(5812)

# பணிநிலை வேண்டுகை

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்புநோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-**

**ஒப்புநோக்குநர்**

**அகவை :-** 25இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**கல்வித்தகைமை:-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் :-**

முன் அனுபவமும் அரசியல் குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:- உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

**வேதனம:-** நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் 06.04.2005(புதன்கிழமை)காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்

**நிர்வாகம்**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது